R.C. No. 295/65 P 1/2
MADRAS RECORD OFFICE
9 - SEP 1965

மேழிச்செல்வம்



விசுவாவசு ஹூ ஆவணி மீ
1965 - ஆகஸ்ட் - செப்டம்பர்.

25 காசு

மதுரை மாவட்ட "தீவிர விவசாயப் பகுதித் திட்டம்" துவக்க விழா

தீவிர சாகுபடி திட்ட உபகரணங்கள் பற்றி விவசாயத்துறை நெறியாளர் திரு. கே. வி. ராமநாதன், முதல் அமைச்சர் திரு. M. பக்தவத்சலம் அவர்களுக்கு விளக்குகிருர்.



முதல் அமைச்சர் திரு. M., பக்தவத்சலம் அவர்களுக்கு பொருட்காட்சியில் வைக்கப் பட்டுள்ள காட்சிப் பொருள்களை உதவி விஸ்தரிப்பு நிபுணர் திரு. எர்னெஸ்ட் விளக்குகிருர். உடனிருந்து கவனிப்பவர்கள் விவசாயத் துறை நெறியாளர் திரு. கே. வி. ராமநாதன், துணை வேளாண்மை இயக்குநர் திரு. கே. எ. சௌகத் அலி முதலியோர் ஆவர்.



விவசாய அமைச்சர் திரு. P. கக்கன் அவர்கள் உரையாற்ற முதல் அமைச்சர் திரு. M. பக்தவத்சலம், விவசாயத் துறை நெறியாளர் திரு. கே. வி. ராமநாதன், மாவட்ட கலெக்டர் திரு. சேஷன் முதலியோர் மேடையில் அமர்ந்துள்ளனர்.

[1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் தேதி மதுரையில் நடந்த விழாக் காட்சிகள்]

பருத்தியைப் பற்றிய முழு விவரங்களும் கொண்ட முதற் புத்தகம்! விற்பனைக்குத் தயார் !!

"பருத்தி முழு உரை"

(ஆங்கிலம்)

(COTTON MONOGRAPH)

எழுதியவர் :

ஆர். பாலசுப்ரமணியம்.

விலை ரூ. 40.

உங்கள் பிரதிக்கு இன்றே எழுதுங்கள்

விவரங்களுக்கு :

விவசாய நெறியாளர்,
சேப்பாக்கம்,
சென்னை-5.

அட்டைப்பட விளக்கம் :—

'தீவிர விவசாயப் பகுதித் திட்டம்' துவக்க விழாவை முன்னிட்டு மதுரையில் அமைக்கப்பட்டிருந்த பொருட் காட்சியில் தென்னை வகைகள்.

—×—

மேழிச் செல்வம்

வருடாந்தர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ. 0·50

உள்ளுரை

	பக்கம்
பசுந்தாள் உரப் பயிர் வளர்ப்பீர் ..	5
நீலகிரியில் மண்வளப் பாதுகாப்பு முறைகளால் பெற்ற நன்மைகள்	8
பருத்திக்கும் உரமிட்டு பலன்மிக அடையுங்கள்	12
அரசினர் தென்னை நாற்றங்கால்களில்.	
கால்நடை நோய்கள் பற்றிய முன் அறிவிப்பு.	
உங்கள் மண்ணுக்கும் நடும் பருவத்திற்கும் ஏற்ற கரும்பு நடவு முறைகளைக் கையாண்டு அதிக மகசூலை பெறுங்கள்	14
கேழ்வரகின் கொலை நோய் ஆராய்ச்சியில் கோவில்பட்டியில் கண்டறிந்த தடுப்பு முறைகள்	15
வானொலிச் செய்திகள் ..	18
வீரியச் சோளம் வாழியவே ..	22
ஆலம்பாடி ..	24
சர்க்கரை வள்ளிக்கிழங்கு சரகுபடி செய்வீர்	26
1965-ம் ஆண்டு ஜூன் மாதக் கால நிலை அறிக்கை.	28
விவசாயிகளுக்கு ..	30

விளம்பரங்கள் :

தேசீய சேமிப்பு நிறுவனம் ..	4
ஷா வாலாஸ் & கம்பெனி ..	7
அமெரிக்கன் ஸ்பிரிங்ஸ்	13, 25
பசிப்பிணியிலிருந்து ..	17
உங்கள் நெற்பயிருக்கு ..	23
டாடா பைஸன் ராலி ..	29
ராஜா பண்ணைத் தோட்டம் ..	30

உங்களுக்கு ஒரு மாதாந்திர பென்ஷன்

அடுத்த 10 ஆண்டுகளுக்கு மாதாமாதம் ரூ. 100க்கு ஒரு 10 ஆண்டு நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட் (முதல் வெளியீடு) வாங்குங்கள். 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொரு மாதமும் ஒரு சர்டிபிகேட் முதிர்வடைந்து ரூ. 180ஐ அளிக்கும். இப்படி மாதாமாதம் கிடைக்கும் வருமானம் வயது காலத்தில் ஒரு வரப்பிரசாதமாகும். தவருமல் பென்ஷனே அளிக்கிறதல்லவா.

சர்ட்டிபிகேட்டுகள் முதிர்வடையும்போது நீங்கள் விரும்பினுல் கிடைத்த வட்டியை செலவுக்கு வைத்துக் கொண்டு, ஆரம்ப முதலான ரூ. 100ஐ மீண்டும் நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகளில் முதலீடு செய்யலாம். இதனுல் புதியதாக முதலீடு செய்த தேதியிலிருந்து மற்றொரு 10 ஆண்டுகளுக்குப் பிறகு உங்களுக்கோ அல்லது உங்கள் சந்ததியாருக்கோ ஒரு பென்ஷன் கிடைக்கிறது.

இப்படிச் செய்வது சிறந்த முதலீடாகும். ஆண்டுக்கு 8 சதவீதம் சாதாரண வட்டி அல்லது 6.05 சதவீதம் கூட்டு வட்டியை தருகிறது. வருமான வரி செலுத்துபவராக இருந்தால் வட்டிக்கு வரி உண்டு.

தேசீய சேமிப்பு நிறுவனம்

DA-65/145

மேழிச்செல்வம்

சுழன்றுமேர் பின்ன துலகம் அதனு
லுழந்தும் உழவே தலை.

மலர் 22 | விசுவாவசுஞ ஆவணிமீ—1965—ஆகஸ்ட்-செப்டம்பர் | இதழ் 8

பசுந்தாள் உரப்பயிர் வளர்ப்பீர்!

வயலுக்குப் பசுந்தழை இடும் பழக்கம் மிகவும் தொன்மையானது. மனிதன் கால்நடைகளுடன் நாடோர்ந்து உயிர் வாழ்ந்தது மாறி, பூமியைக் கிளரி சாகுபடி துவக்கியபோது பயிருக்கு மண் வளத்தின் தேவையைக் கண்டான். இதனுல் அவனுக்குப் பூசாரத்துக்காக இடம் பெயர்ந்து காடழித்து வாழும் பழக்கம் உண்டாகியது. பின்னுல் நிலையாக இருந்து, நீர்ப்பாய்ச்சி வேளாண்மை செய்தபொழுது, வளம் பெருக்கத் தழை போட ஆரம்பித்தான். பிரயாசைப்பட்டு போதிய தழை தேடி பொருளையும் நேரத்தையும் செலவிடுவதற்குப் பதிலாக, பயிரிடும் நிலத்திலேயே பசுந்தாளை வளர்க்க ஆரம்பம் செய்த போது வெற்றிப் பாதையிலே விவசாயம் முக்கிய திருப்பத்தையடைந்தது. பயிருக்குத் தழை உரம் தேவையென்பதை இன்றும் சவுக்குத் தோப்பிலிருந்து ப்ல வருடங்களுக்குத் தழை உதிர்ந்து மரம் வெட்டிய பின்னுல் சாகுபடியாகும் பயிரிலிருந்தும், வெற்றிலைக் கொடிக்காவிலிருந்து அகத்தித் தழை உதிர்ந்து உரமேறிய பூமியில், பின்னுல் வளரும் அமோகமான நெற்பயிரிலிருந்தும் கண்கூடாய்ப் பார்க்கிறோம். வனத்தையொட்டிய வண்டல் பூமியில் பயிர் விளைச்சலுக்குக் கேட்பானேன். எல்லமே தெரிந்திருந்தும், நாட்டின் விவசாய உற்பத்தியும், முக்கியமாக உணவு உற்பத்தியும் பற்றுக்குறையான நிலையிலிருப்பதைக் கண்டும், சிக்கன முறையில் பிறர் தயவின்றித் தானே ஏன் ஒவ்வொரு விவசாயியும் போதிய அளவிற்குப் பசுந்தாள் உற்பத்தி செய்யக்கூடாது?

தழை போடுவதால் நிலத்திற்குப் ப்ல வகையில் நன்மைகளுண்டாகின்றன. மண்ணில் இயற்கைத் தசைப் பொருள் அதிகரிக்கிறது. இதை ஆதாரமாக்கிக்கொண்டு நலன் செய்யும் பலவகைக் கிருமிகள் பெருகுகின்றன. தண்ணீரில் தசைப் பொருள் அழுகி அமிலங்கள் வெளியாவதால் மண்ணுடன் சார்ந்த ஊட்டப் பொருள் கரைக்கப்பட்டு, பயிருக்கு உணவாகின்றன. இளகிய மண்ணிலும் சரி, கெட்டி மண்ணிலும் சரி, துகள்களினூடே தசைப்பொருள் படிவதால் வயனம் மாறி நீரைப் உட்கொண்டு சேமிக்கும் தன்மை அதிகரிக்கிறது. பசுந்தாள் பயிரின் வேர்கள் செல்வதால் நெக்கு விட்டு இறுக்கமான பூமியும் கூட இளகி, நீர் பிடிக்கா வண்ணம் வழிந்து விடச் செய்து, பயிர் வளர்ச்சிக்கு உதவுகிறது. பயறினத்தைச் சேர்ந்த பசுந்தாள் பயிரின் (Leguminous) வேருடன் தோழமை பூண்டு உயிர்வாழ் ஓர் வகைக் கிருமிகள் வானிலுள்ள தழைச்சத்தை (நைட்ரஜன்) உட்கொண்டு பூமியில் சேமித்து வைக்கின்றன. இவ்விதக் கிருமிகள் வளர்வதைப் பசுந்தாள் பயிரின் வேரிலே எழும்பும் பட்டாணிக்கடலை போன்ற உருண்டைகளிலிருந்து (வேர் முடிச்சுகள்) தெரிந்துகொள்ளலாம். இதை ஆங்கிலத்தில் ‘சிம்பையோஸிஸ் (Symbiosis) என்று கூறுவார்கள். நல்ல சூழ்நிலையில் இவ்விதம் சேமிக்கப்படும் தழைச்சத்தின் அளவு ஒரு ஏக்கரில் 150 கிலோ அமோனியா உப்பின் தழைச் சத்தின் அளவை எட்டிவிடக் கூடுமென்று ஆராய்ச்சியாளர்கள் கண்டிருக்கிருர்கள். தழைப் பயிரின் வேர்கள் ஆழமாகச் செல்வதால் அடிமட்டத்திலுள்ள ஊட்டப் பொருள்கள் வெளிப்படுத்தப்பட்டு மேலே வந்து பின்னுல் வரும் பயிரை ஊக்குகிறது.

பசுந்தாள் பயிரில் அநேகம் மேலான மாட்டுத் தீவனமாகவும் உபயோகப்படுகின்றன. ஆந்திரப் பிரதேசத்தில் சணப்பை பயிர் செய்து தாளை அறுத்தெடுத்து வைக்கோலுடன் மாற்றி மாற்றி அடுக்கிப் போர் போட்டு வருடம் முழுமையும் வைத்து மாட்டிற்கு, முக்கியமாகக் கரவைப் ப்சுவிற்குப் போடுவதால் பால் அதிகமாகச் சுரந்து

* 16—7—1965 அன்று ‘ கிராம வானொலி மன்ற ’ நிகழ்ச்சியில் “ பசுந்தாள் உரப் பயிர் வளர்ப்பீர் ” என்ற தலைப்பில் திரு. எஸ். எம், சுலைமான், பி.எஸ்ஸி. (விவ.), கூட்டு விவச்ாய நெறியாளர், சென்னை. அவர்கள் ஆற்றிய உரை.

பயனடைகிறார்கள். பில்லிப் பயறு என்ற பசுந்தாள் களிமண் பூமியில் பயிராக்கப்பட்டு இரண்டு மூன்று முறை அறுத்தெடுத்து மாட்டுக்குத் தீவனமாகப் போடப்படுகிறது. இதேபோல் உளுந்துக்கொடி, நிலக்கடலைக் கொடி முதலியன பசுந்தாளாகவும் தீவனமாகவும் உபயோகிக்கப்படுகின்றன.

ஆராய்ச்சியின் மூலம் 15 பங்கு எடையுள்ள தழை உரம் ஒரு பங்கு தானியத்தை உற்பத்தி செய்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு வேண்டிய 2500 கிலோ எடையுள்ள தழையைப் போடுவதால் நெல்லில் சுமார் 30 சதவீதம் அதிக மாசூலை அடைய முடியும். தழை உரத்தால் விளைந்த நெல்லில் அரிசி சத்தின் தரம் உயர்ந்து வாய்க்கு ருசியாகவிருக்கிறது. அவ்விதப் பயிரின் வைக்கோலில் கூடத் தீவன ஊட்டம் அதிகமாகிறது, பழஞ்சோற்றுக்குக் கூட தழை உரத்தால் விளைந்த அரிசி ஏற்றமானது. இவ்வுண்மைகளையறிந்து விவசாய பெருங்குடி மக்கள் ஆங்காங்கே தங்களின் சாப்பாட்டிற்கு நன்ருகத் தழை உரமிட்டு நெல் விளைத்து வைத்துக்கொள்ளும் பழக்கமிருந்து வருகிறது.

உற்பத்திச் செலவை எடுத்துக்கொள்வோம். அமோனியம் சல்பேட்டின் விலை மெட்ரிக் டன்னுக்கு ரூ. 400 என்று வைத்துக்கொண்டால், ஒரு கிலோ 40 பைசாவாகிறது; இதை பூமியில் போடுவதால் 2 கிலோ தானியம் விளையும் என்பது ஆராய்ச்சி. இதே 2 கிலோ தானியம் பசுந்தாள் மூலம் விளைவிக்க 30 கிலோ தழை தேவை. சணப்பையின் விளைச்சல் நன்ருக விளைந்தால் ஒரு ஏக்கருக்கு 10,000 கிலோ கிடைக்கும். இதற்குச் சாகுபடி செலவு ரூ. 20 ஆகும். எனவே 30 கிலோ தழைக்கு 6 நயாபைசாவாகிறது. இந்தச் செலவு அமோனியா உப்பின் விலையில் 7-ல் ஒரு பங்கு ஆகிறது. நன்ருக விளைந்த ஒரு ஏக்கர் சணப்பைத்தாள் 4 ஏக்கருக்கு உரமாகும். ஆகவே செலவு ஒரு ஏக்கருக்கு ரூ. 5-ல் முடிந்துவிடுகிறது. அதேயளவு தழைச்சத்தைக் கொடுக்க 150 கிலோ அமோனியம் உப்பு ரூ. 40 செலவில் தேவைப்படும். பசுந்தாளிலுள்ள மணிச்சத்து, சாம்பல் சத்து (பாஸ்பரஸ், பொட்டாஷியம்) முதலியவற்றைக் கணக்கில் சேர்க்காததால் அவை வேறு மிச்சம். எப்படிப் பார்த்தாலும் பசுந்தாளுரம் ரசாயன உரத்தில் 7 அல்லது 8-ல் ஒரு பங்கு செலவிலேயே முடிந்துவிடுகிறது.

இந்த மாதிரியாகப் பசுந்தாளுரத்தின் நன்மைகளைக் கூறிக்கொண்டே போவதால் அதற்கு வக்காலத்து வாங்கிவிட்டேன் என்று நினைக்க வேண்டாம். பசுந்தழை உற்பத்தியில் சில சிக்கல்களுமிருக்கின்றன. பாசன வசதி குறைவாகவுள்ள புஞ்சைகளில், குறிப்பாகத் தோட்டக்கால் பூமிகளில் தழை போட இயலாது. பசுந்தாள் பயிர் சாகுபடி செய்ய முக்கிய பயிர்களை அடுத்து கால இடைவெளியும் சிறிதளவாவது தண்ணீரோ, போதிய மழையோ தேவை. பயிரைக் கால்நடை மேய்ந்துவிடாது பாதுகாக்கக் காவலோ கட்டுப்பாடோ தேவை. முக்கிய பயிர்களைப் பூச்சி பூஞ்சாணங்கள் ஒவ்வொரு பருவத்திலும் தாக்குவதென்பது இக்காலத்தில் சாதாரணமாகிவிட்டது. அவ்விதம் பாதிக்கப்பட்ட பயிர்களை ஊக்குவிக்கவும் தழை உற்பத்தி செய்ய இயலாத பூமிகளுக்கும், தழை போதிய அளவு கிடைக்காதபோது பயிர் விளைச்சலைக் கணிசமான அளவிற்கு உயர்த்துவதற்கும் செயற்கை உரம் அத்தியாவசியம். எனவே சீரான விவசாயத்தின் மூலம் விளைச்சலைப் பெருக்க பசுந்தழையையும் ரசாயன எருவையும் சேர்த்து உபயோகிப்பதுதான் மேலானது.

இனி பசுந்தாள் பயிர்களின் வகைகளைச் சிறிது ஆராய்வோம். நிலக்கடலை, பச்சைப்பயறு, உளுந்து, கொள்ளு, காராமணி முதலியவற்றின் கொடி, தக்கைப் பூண்டு, சீமையகத்தி (செஸ்பேனியா), கொளுஞ்சி, அவுரி, சணப்பு, பில்லிப்பயறு, அகத்தி, லூபின், பக்வீட், கலப்பகோனியம் எனப் பயிரிட ஏதுவான பலவகைகளிருக்கின்றன. இவற்றில் சமவெளிப் பிரதேசத்தில் முக்கியமாகக் களருள்ள நிலங்களுக்கும், புதிதாக அச்சுத் திருத்தி நஞ்சைக்குக் கொண்டுவரும் கெட்டியான பூமிகளுக்கும் தக்கைப் பூண்டு மிகவும் நல்லது. களிமண் பூமியாகவும் பள்ளமாகவுமிருக்கும் வயல்களில் பில்லிப்பயறைப் பயிரிடலாம். மணல் சாரியாகவோ, மண்ணிளக்கமுள்ள பூமியாகவோ இருந்து கால இடைவெளி குறுகியிருந்தால் சணப்பை ஏற்றமானது. இளக்கமுள்ள பூமியாகவும், ஆடு மாடு மேயுமிடமாகவுமிருந்தால் கொளுஞ்சி நல்லது. தண்ணீர் வசதியிருந்தால் எல்லா வகை மண்ணுக்கும் செஸ்பேனியா சிலாக்கியமானது.

உரச் சத்தைக் குறிக்கோளாகக்கொண்டு பார்ப்போமாகில், உலர்த்தியெடுத்த தக்கைப் பூண்டில் தழைச்சத்தும், மணிச் சத்தும், சாம்பல் சத்தும் முறையே 3.5, 0.6, 1.2 சதவிகித மிருப்பதால் அதற்கு முதலிடமும், செஸ்பேனியாவில் 2.7, 0.5, 2.2 சதவிகிதமிருப்பதால் அதற்கு இரண்டாவது இடமும், சணப்பையில் 2.3, 0.5, 1.8 சதவிகிதமிருப்பதால் அதற்கு மூன்ருவது இடமும்' கொளுஞ்சியில் 1.8, 0.2, 0.6 சத விகிதமிருப்பதால் அதற்கு நான்காவது இடமும் கொடுக்கவேண்டும். ஆனால் தழை உற்பத்தியின் மொத்த எடையை எடுத்துக்கொண்டால் வரிசை வாரியாக, செஸ்பேனியா, சணப்பை, தக்கைப்பூண்டு, கொளுஞ்சி என நான்கும் இடம் வகிக்கின்றன.

இதுவரை பயிராக்கப்படும் பசுந்தழை இனத்தைப் பற்றி மட்டுமே கூறப்பட்டது. தழை கொடுக்கும் செடிகளும், மரங்களும் எத்தனையோ இருக்கின்றன. இவற்றில் விவசாயத் துறையினரால் முக்கியமாக ஊக்குவிக்கப்படுபவை கிளிரிசிடியா அல்லது எருத்தழைச் செடியும் ஐபோமியா அல்லது கொடிப் பூவரசுமாகும். இவை எல்லா வகையிடங்களிலும் வேரூன்றிச் சீக்கிரமே வளர்ந்து பல ஆண்டுகளுக்கு கணிசமான அளவில் வருடந்தோறும் தழை களைந்து உரமிட ஏதுவானவை. பயிரிடும் பசுந்தாள் வகை முக்கியமாக நஞ்சைக்கே ஏற்றவை. உபரியாக இருந்தால் மட்டும் கம்போஸ்ட் செய்து புஞ்சைக்கும், தோட்டக்கால் பூமிக்கும் உரமிட முடியும். ஆனால் கொடிப் பூவரசும்,

எருத்தழைச் செடியும், உரம் தேவையுள்ள புஞ்சை, தோட்டக்கால் பூமியிலேயே வரப்பு, வேலியோரங்களில் வைத்து வளர்த்து உபயோகிக்க ஏற்றவை. நஞ்சையின் சாகுபடியில் நித்தம் வருமானமிருப்பதால் மக்களின் கவனம் அதிகம். புஞ்சைக்குத்தக்க உரத்தைச் செலவின்றித் தேடிப் போதிய அளவில் பிரயோகித்தாலொழிய விளைச்சல் பெருகி எளிய விவசாயிகளின் பொருளாதாரம் முன்னேருது. சாகுபடியாகும் ஒவ்வொரு ஏக்கர் புஞ்சையின் மூலையிலும் ஒரு கம்போஸ்ட் குழியாவது வெட்டியாகவேண்டும். அந்நிலத்தின் வரப்பு வேலியோரத்தில் ஏக்கருக்குக் குறைந்தது 200 செடிகளாவது வைத்து மழையில்லாத காலங்களில் ஓராண்டு காலத்திற்குத் தண்ணீர் ஊற்றியாவது காப்பாற்றப்பட வேண்டும். வளர்த்த பின் ஒரே நாளில் அந்த நிலத்தின் விவசாயி தழை வெட்டி மூலையிலுள்ள குழியிலிட்டு சாணப்பால் தெளித்து மூடிவிடலாம். பின்னுல் பக்குவமான பின் தேவைப்படும்பொழுது கம்போஸ்டை வெட்டி யெடுத்து அங்குள்ள நிலத்திலேயே பொருள் செலவில்லாத முறையில் உபயோகித்து பயிர் வளம் பெருக்கி முன்னேற முடியும்,

கடைசியாக, பசுந்தாள் உற்பத்திக்கு அரசினர் காட்டும் சலுகை குறித்து ஓரிரு வார்த்தைகள் ! பசுந்தாள் விதை வினியோகத்தில், விலையில் 15 சத விகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களை ஊக்குவித்து அவர்களால் ஸ்தாபிக்கும் பசுந்தழைத் தோட்டங்கள், பயிர்களுக்கு ஆகும் செலவில் மூன்றில் இரண்டு பங்கைச் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் கொடுக்கப்பட்டு வருகிறது. தனிப்பட்ட விவசாயிகள் பசுந்தாள் விதைப் பண்ணை நடத்தி அதிலிருந்து கொடுக்கும் விதைக்கு, குவின்டால் எடைக்கு ஐந்து ரூபாய் மானியமும் கொடுக்கப்பட்டுவருகிறது. பசுந்தாளுர விதை வாங்கி வைத்து விவசாய டிப்போக்கள் மூலம் வினியோகம் செய்ய சுற்றி வரும் கைம்முதலாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ. 5,000 அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சலுகைகளையெல்லாம் நல்ல முறையில் மக்களும், மக்கள் ஸ்தாபனங்களும், முக்கியமாக பஞ்சாயத்துக்களும் அவற்றின் யூனியன்களும் கையாண்டு சீரிய முறையில் வளம் பெருக்கி முன்னேற வேண்டும்.

> " இலமென் றசையி இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும் "

என்பது வள்ளுவர் வாக்கு.

வளம் பெருக்க செயற்கை உரம் போதவில்லையென்றே, உரமிட்டாலும் பூமி விளையுமோவென்றே, விளைந்தாலும் பற்றுக்குறை தீருமோவென்றே வீணில் சோர்வுருது ஒவ்வொருவரும் முனைந்து நின்று வளம் பெருக்கப் பசுந்தாளுரப் பயிர் வளர்ப்பீராக !



நீலகிரியில் மண்வளப் பாதுகாப்பு முறைகளால் விவசாயிகள் பெற்ற நன்மைகள்

டாக்டர் மந்தரமூர்த்தி, B.Sc., (Ag.), M.Sc., (Calif), P.H.D., (Mich St.)

மண்ணின் மேற்பரப்பானது வேண்டிய தாவர உணவுச் சத்துக்களேயும், கரிமப் பொருள்களேயும் மற்ற குணங்களே யும் தன்னகத்தே கொண்டுள்ளதால், தாவரங்கள் நன்கு வளர்கின்றன. ஆகவே மண்ணின் மேற்பரப்பை பாதுகாத்தல் மிகவும் அவசியமாகிறது. தகுந்த பாது காப்பு அளிக்காமல் மண்ணின் மேற்பரப்பு சிதைந்து அழிந்துவிட்டால், பயிர்கள் வளராமல் போவதோடு சாகுபடியும் பலனளிக்காமல் போகிறது. நிலத்தின் தரத்தை மண் அரிப்பு மிகவும் பாதிக்கிறது. மழைநீர், காற்று முதலியவைகளால், மண்ணின் மேற்பரப்பு சிதை வடைவதால், மண் அரிப்பு ஏற்படுகிறது. இதனல், பொறுக்கு விதைகள், உரமிடுதல் முதலியவற்றுல் ஏற்படும் அதிக மகசூல் குறைவதோடு சாதாரண மகசூல் பெற அதிக உரமும் இட வேண்டியுள்ளது. மேடு பள்ளங்களும், சரிவுகளும், மழைப்பிரதேசங்களில் பெய்யும் மிகுந்த மழையும் மண் அரிப்பு அதிகமாக ஏற்படச் செய்கின்றன. மலேப்பிரதேசங்களில் மண்வளப் பாதுகாப்பு வேலேகளே செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து 1951-ல் மண்வளப் பாதுகாப்பு திட்டம் நீலகிரி யில் துவக்கப்பட்டது.

சரிவு நிலங்களில் சீரற்ற முறையில் செய்யப்பட்ட சாகுபடியால் ஏற்பட்ட மண் அரிப்பு.

நீலகிரியில் மண் அரிப்பு :—நீலகிரி மாவட்டம் நீரோடைகளும், பள்ளத்தாக்குகளும் நிறைந்த மலேப் பிரதேசமாகும். பொதுவாக 5 சதவீதம் முதல் 100 சத வீதம் வரை நிலச்சரிவுகள் நிறைந்த பகுதியாகும். அமிலத் தன்மையுடன் கூடிய மண் குறைந்த நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ் சத்துக்கள் கொண்டதாகும். இருபருவ காலங்களிலும் பெருமழை (வருடத்திற்கு 1891 மிலி மீட்டர்) இங்கு பெய்கிறது. வடகிழக்குப் பருவத்தில் பெய்யும் மழை அதிக சேதம் விளேவிக்கிறது. இந்த பருவத்தில் 60 சதவீதத்துக்கு மேற்பட்ட விளே நிலங்கள் உருளேக்கிழங்கு அறுவடைக்குப் பின் கரம்பாக உள்ளதால், மண் அரிப்பு அதிகமாக ஏற்படுகிறது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்யும் பனியினுல் பெரும்பாலான பயிர்கள் பாதிக்கப்படுவதாலும் மண் அரிப்பு ஏற்பட சாதகமாகிறது.

உருளேக்கிழங்கு, கோதுமை, சாமை, பார்லி, காய்கறி கள் போன்ற பயிர்களின் சாகுபடியின்கீழ் உள்ள 33,500 ஏக்கர் நிலப் பரப்பில், 22,000 ஏக்கர்களில் உருளேக்கிழங்கு மட்டும் மானவாரிப் பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. உருளேக்கிழங்கை மட்டுமே வரிசைப் பயிராக சாகுபடி செய்வதாலும், மேடுபள்ளங்களிலும், மண் பாதுகாப்பு முறைகளே கடைப்பிடிக்காமல் சரிவு நிலங்களிலும் சாகுபடி செய்யப்படுவதால் மண் அரிப்பு ஏற்படுகிறது. பராமரிப்பற்ற தேயிலேத் தோட்டங்கள், மேய்ச்சல் நிலங்கள், தரிசு நிலங்கள் முதலியவற்றுலும் மண் அரிப்பு அதிகமாகிறது. ஏறக்குறைய 1,70,000 ஏக்கர்கள் மண் அரிப்பால் சேதம் அடைந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

மண் அரிப்பால் ஏற்பட்ட சேதங்கள் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்தன. இம்மாவட்டத்தில் எடுத்த சர்வே யின் முடிவுகள், மொத்த நிலப்பரப்பில் 10 சதவீதத்தில் சுமாரான சேதமும் மீதிப் பகுதியில் அதிகமான சேதமும் மண் அரிப்பால் ஏற்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டியது. சரிவு நிலங்களில் மேல் மண் முழுவதும் அரிக்கப்பட்டுவிட்டதால், அதிக அளவு உரமிட்டு அடி மண்ணில் சாகுபடி செய்ய வேண்டிய நிலே ஏற்பட்டது. 1910–20-ம் வருடங்களில் 4 முதல் 6 டன் மாட்டுரம் இட்டு 6,000 முதல் 7,000 ராத்தல் உருளேக் கிழங்கு அறுவடை செய்யப்பட்ட நிலத்துக்கு, அதே அளவு மகசூல் பெற 1920–35 வருடங்களில் 2-3 டன் மாட்டுரத்துடன் 500 ராத்தல் இரசாயன உரங்களும்,



கரம்பு நிலங்களில் ஏற்பட்டுள்ள சிற்றோடை அரிப்பு.

1935–40 வருடங்களில் 1–2 டன் மாட்டுரத்துடன் 2,000 ராத்தல் இரசாயன உரங்களும் இட வேண்டிய நிலேயேற்

பட்டது. இதிலிருந்து விளையும் சக்தியும், மண்ணின் தரமும் மண் அரிப்பால் குறைந்தது என்று தெரிய வருகிறது. இதனால் மண்ணை பராமரிக்க வேண்டியதன் அவசியமும் தெளிவாக விளங்குகிறது.

நீலகிரியில் செயல்படுத்தப்பட்ட மண் வளப் பாதுகாப்பு முறைகள்.—இங்கு சாகுபடி செய்யப்படும் நிலங்களில் 15 சதவீதத்துக்கு மேற்பட்ட நிலங்கள் சரிவு நிலங்களானதால், படிமட்டங்கள் அமைக்கும் முறை மேற்கொள்ளப்பட்டது. படிமட்டங்களின் முகப்புப் பகுதிகள் சாய்வாக அமைக்கப்பட்டு, அவற்றில் புல் முதலியவை வளர்க்கப்பட்டன. நிலத்தின் சாய்வு நிலைக்கும், படியின் உயரத்திற்கும் தக்கவாறு 10 முதல் 20 அடி அகலத்தில் படிமட்டங்கள் அமைக்கப்பட்டன. 2½ சதவீதம் முதல் 8 சதவீதம் வரை உட்புறமும், 3/4 சதவீதம் நீள வாட்டத்திலும் 'சாய்வு நிலை' கொடுக்கப்பட்டு, மழை காலங்களில் நீர் உட்புறமாக வடிந்து 'வடிகால்வாய்கள்' மூலமாக வெளியேறும் வண்ணம் படிமட்டங்கள் அமைக்கப்பட்டன. வடிகால்வாய்களில் மண் அரிப்பு ஏற்படா வண்ணம் ஆங்காங்கு 'விழு குழிகள்' (Drop pits) வெட்டப்பட்டன.

பராமரிக்கப்படாத தோட்டங்களில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்க 10 அடி இடைவெளியில் சமதள வரப்புகள், அல்லது சமதள பள்ளங்கள் போடப்பட்டு வடிகால்வாய்கள் அமைக்கப்படுகின்றன. இவை தவிர சிற்றோடைகளைத் தடுத்தல், மாற்று கால்வாய்களைத் தோண்டுதல், நீரோடைகள் ஏற்படும் மூலகாரணங்களைத் திருத்துதல், நீரோடைக் கரைகளைப் பாதுகாத்தல், பாதையோரங்களில் மண் அரிப்பைத் தடுத்தல் போன்ற பிற முறைகளும் இங்கு பின்பற்றப்பட்டன.

கடுமையான மழைகாலங்களில் பெறும் மழையில், பயிரின் தேவைக்கு வேண்டிய நீரைச் சேமித்துக் கொண்டு, அதிகமாக நீரை மட்டும் வடியவிடும் வகையில் மண்வளப் பாதுகாப்பு முறைகள் அமைந்துள்ளன. இதனால் மண் வளம் பாதுகாக்கப்படுவதோடு, நிலத்துக்கு இட்ட எரு, இரசாயன உரங்கள் முதலியன நீரில் கரைந்து நிலத்தினின்று அடித்துச் செல்லப்படாமலும் சேமிக்கப்பட்டு, முழுப்பலனும் பயிர்கள் பெற முடிகிறது.

மண் அரிப்பால் ஏற்பட்ட சேதங்கள்.

மண்வளம் காக்கும் படிமட்ட அமைப்புகள். முகப்புப் பகுதிகளில் புல் வளர்ந்திருப்பதையும் காணலாம்.

பொறுக்கு விதை உபயோகித்தல், உரமிடுதல், இடையுழவு செய்தல், பயிர்ப்பாதுகாப்பு செய்தல் முதலியவற்றுடன் சமதள சாகுபடி, மாற்றுப்பயிர் செய்தல் போன்ற நில வளம் காக்கும் முறைகளையும் அபிவிருத்தி செய்யப்பட்ட நிலங்களில் பின்பற்ற வேண்டியது அவசியம். மாற்றுப் பயிர் முறையில் உருளைக்கிழங்குக்குப் பின் லூபின், பக்வீட் போன்ற பசுந்தழைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

திட்ட காலங்களில் வேலை முன்னேற்றம்.—முதலில் 90 ஏக்கர் நிலப்பரப்பில் 1951-ம் வருடம் கேத்தி பள்ளத்தாக்கில் ஆரம்பிக்கப்பட்ட மண்வளப் பாதுகாப்பு திட்ட வேலைகள் பின்னர் மாவட்டம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்பட்டது. 1955–56 முடிய முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் மண்வளப் பாதுகாப்பு வேலைகள் செய்யப்பட்டன. இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலங்களில் ஏற்பட்ட திட்ட வேலை முன்னேற்றம் பின்வருமாறு :—

வருடம்.	மண்வளப் பாதுகாப்புத் திட்ட வேலைகள் செய்யப்பட்ட பரப்பளவு.
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்—	
1956–57	850 ஏக்கர்கள்.
1957–58	1,046 ,,
1958–59	1,684 ,,
1959–60	1,583 ,,
1960–61	2,165 ,,
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்—	
1961–62	2,815 ஏக்கர்கள்.
1962–63	1,695 ,,
1963–64	1,236 ,,
1964–65	1,127 ,,
1965–66 (குறிக்கோள்)	600 ,,
மொத்தம் ...	14,801 ,,

தோட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்ட சமதள பள்ளங்கள்.

ஏறக்குறைய 15,401 எக்கர்களில்தான் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் மண்வளப் பாதுகாப்பு வேலைகள் அமுலாக்கப்படும். மாநிலத்தின் மற்ற மலைப் பிரதேசங்களிலும் உள்ள மண் அரிப்பின் சேதத்தைக் கவனிக்கும்போது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் முடிய மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி கொஞ்சமே என்பது புலனுகும். அதையெல்லாம் எண்ணி மண் வளப் பாதுகாப்பு வேலைகள் கோடைக்கானல், சேர்வராயன் மலைப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. மண் வளப் பாதுகாப்பு வேலைகளுக்கு செலவுகள் அதிகமாவதால், அரசாங்கமே ஆரம்பத்தில் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்கிறது. செலவில் 50 சதவீதம் மான்யமாகவும் மீதியை 20 சமவருடத் தவணைகளில் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படும்.

பராமரிப்பும் பின்பற்றவேண்டிய வழிமுறைகளும்.—படிமட்டங்கள் போட செலவு அதிகம் ஆவதால், பின்னர் அவைகள் நல்ல முறையில் பராமரிக்கப்படாவிட்டால், போட்ட மூலதனம் விரயமாவதோடு, மண் அரிப்பு மேலும் ஏற்பட வழியமைக்கும். கால்நடைகள் படிமட்டங்களைக் கடந்தும் மாற்றுக் கால்வாய்களைத் தூர்த்தும் சேதப்படுத்துகின்றன. வயலைச் சுற்றி வேலிப் பயிர்கள் வளர்த்தும் அல்லது கம்பி வேலி அமைத்தும் இவற்றைத் தடுக்கலாம். படிமட்டங்களின் முகப்புப் பகுதிகளில் பிரத்தியேக புற்களை வளர்த்து பாதுகாக்க வேண்டும். இத்தகைய புற்கள் உறைபனியிலும் நன்ருக வளரக்கூடிய ஆற்றல்பெற்றுள்ளதால் நல்ல பராமரிப்புடன் வளர்த்தால் நீண்ட நாட்களுக்கு வரப்புகள் நிலைத்து மண் அரிப்பு ஏற்படாமல் தடுக்கும். வயல்களையும் மண்வளப் பாதுகாப்பு அமைப்புகளையும் மழை பெய்தவுடன் கண்காணிக்கவேண்டும். நீர் சரிவோ, மண் அரிப்போ கொஞ்சம் தென்பட்டாலும், உடனே சரி செய்யவேண்டும். அதிக நீர் சுலபமாக வடிந்து செல்ல செய்யப்பட்டுள்ள அமைப்புகளை தடைகளின்றி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

படிமட்டங்களின் சாய்வுநிலை எப்போதும் பராமரிக்கப்பட வேண்டும். சாய்வு நிலையில் மாற்றம் ஏற்பட்டு நிலத்தில் தண்ணீர் தேங்கினுல், உருளைக்கிழங்குகள் ''பழுப்பு அழுகல்'' நோயால் பாதிக்கப்படும். நிலத்தைத் தயார் செய்யும்போது 'சாய்வ நிலை' மாருமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நிலத்தைக் கிளறும்போது மண் கொத்தலை வடிகால்வாய் முனையிலிருந்து ஆரம்பித்து அடுத்த முனை நோக்கி முன்னேற வேண்டும். அடுத்த வருடம் மண் கொத்தலை மேல் மட்டத்தில் ஆரம்பித்து வடிகால்வாய் முனை நோக்கி முன்னேறவேண்டும். இப்படி மாற்றி மாற்றி உழுவதாலும், கட்டிகளை உடைப்பதாலும் வேறு செலவில்லாமல் சாய்வு நிலை சீராகப் பாதுகாக்கப்படுகிறது. சமமாக மழை பெய்யும் தென்மேற்குப் பருவ காலத்தில் பார்களும் கிடங்குகளும் எடுக்கும்போது படிமட்டத்தின் பகுதியில் அமைந்துள்ள வடிகால்வாயில் கிடங்குகள் சேரும்படி அமைத்தல் வேண்டும். இதனுல் கூடுதல் தண்ணீர் வடிய வசதியாகும். சீரற்ற முறையில் மழை பெய்யும் வடகிழக்கு பருவத்தில் மண் அரிப்பைத் தடுப்பதுடன், ஈரத்தையும் பாதுகாக்கவேண்டியதால் பார்களையும் கிடங்குகளையும் படிமட்டங்களுக்கு இணையாக எடுத்தல் வேண்டும். அதிக நீரை சேர்த்து வடிகால் வாயில்விட 15–20 அடிக்கு ஒன்று வீதம் இடைகால்வாய்கள் அமைக்கவேண்டும்.

மிகுதி நீரை வெளியேற்றும் வடிகால்வாய்கள், விழு குழிகள், மாற்று கால்வாய்கள் முதலியவற்றை அடிக்கடி கண்காணிக்க வேண்டும். விழுகுழிகளில் சேரும் வண்டலை அப்புறப்படுத்தி அதன் ஆழத்தை நிலைப் படுத்த வேண்டும். விழுகுழிகளின் ஆழம் 5 அடிக்கு மேற்பட்டால், நீர் விழுந்து மேலும் குழி, பள்ளமடைவதைத் தடுக்க குழியின் அடியில் கற்கள் பாவப்பட வேண்டும். மேற்கண்ட பராமரிப்பு முறைகளுடன் பொறுக்கு விதை உபயோகித்தல், தொழு உரம், இரசாயன உரங்களிடுதல், மாற்றுப் பயிர் செய்தல், பசுந்தழை பயிரிட்டு மடக்கி உழுதல் போன்ற திருந்திய சாகுபடி முறைகளையும் பின்பற்றப்பட்டால் மண்ணின் வளம் பாதுகாக்கப்பட்டு, மழை நீரும் அதிகமாக கிரகிக்கப்பட்டு குறைந்த அளவு நீர் வெளியேற முடிகிறது. இதனுல் பராமரிப்பு செலவும் குறைகிறது.



மண் பாதுகாக்கப்படாத பகுதியின் சேதமும் பாதுகாக்கப்பட்ட பகுதியின் சிறப்பும் சேர்ந்த தோற்றம்.

விளைந்த நன்மைகள்.—மண்வளப் பாதுகாப்பு வேலைகளால் பல்வேறு நன்மைகள் ஏற்படுகின்றன. அதனுல் மண் அரிப்பு தடுக்கப்பட்டு நிலம் நிரந்தரமாக அபிவிருத்தி அடைவதோடு, நிலத்தினின்று நீரோடைகளால் அடித்துச் செல்லப்படும் வண்டலின் அளவும் வெகுவாகக் குறைகிறது. இதனுல் நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவது மிகவும் குறைவதால் அதிக அளவு நீர்த்தேங்கி பயன் அளிக்க முடிகிறது. மண் அரிப்பினின்று நிலத்தை பாதுகாக்காத அலட்சியப் போக்கால், கேத்தி பள்ளத்தாக்கில் 60 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கெட்டேரி நீர்த்தேக்கம் முழுதும் வண்டல் படிந்து, உபயோகத்துக்கு பயன்படாமற் போயிற்று. இதிலிருந்து 'கார்டைட்' தொழிற்சாலைக்கு கிடைத்து வந்த நீர் மின்விசை நின்றுவிட்டதால் மின்துறையிலிருந்து தேவையான சக்தியை தொழிற்சாலை பெறவேண்டியதாயிற்று

மண்வளப் பாதுகாப்பு முறைகள் மண் அரிப்பைத் தடுத்து நிரந்தர உற்பத்திக்கு வழியமைத்தன. அதிக அளவு உரமிட்டு மகசூல் எடுக்க முடிந்தது. அதனுல் உருளைக்கிழங்கு மகசூலும் அதிகரித்தது. இந்தக் கூடுதல் மகசூலை கணக்கிட வேண்டி, புள்ளி விவரத்துறை நெறியாளரால் 8 வருடங்களில் நடத்தப்பட்ட பயிர் அறுவடைச் சோதனை விவரங்கள் பின் வருமாறு:

வருடம்.	பரிசோதிக்கப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை (ஜதைகளில்). திட்டமிடப்பட்டவை.	செய்யப்பட்டவை.	அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளில் எக்கர் விளைச்சல். எக்கருக்கு ராத்தல்.	ஹெக்டேருக்கு கிலோ.	அபிவிருத்தி செய்யப்படாத சாதாரணப் பகுதிகள் விளைச்சல். எக்கருக்கு ராத்தல்.	ஹெக்டேருக்கு கிலோ.	சராசரி அதிக விளைச்சல். எக்கருக்கு ராத்தல்.	ஹெக்டேருக்கு கிலோ.	படிமட்ட அமைப்புபால் விளைந்த அதிக விளைச்சல்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1954–55	11	11	15,745	17,648	10,307	11,553	5,438	6,095	53
1955–56	50	49	19,840	22,238	16,840	18,875	3,000	3,363	18
1956–57	50	50	15,530	17,407	11,588	12,988	3,942	4,419	34
1957–58	சோதனை நடத்தப்படவில்லை								
1958–59	100	86	18,643	20,896	14,959	16,767	3,684	4,129	25
1959–60	100	93	17,299	19,390	14,014	15,708	3,285	3,682	23
1960–61	100	100	18,999	21,295	16,428	18,413	2,571	2,882	16
1961–62	சோதனை நடத்தப்படவில்லை								
1962–63	100	100	22,142	24,818	16,770	18,797	5,372	6,021	32
1963–64	100	97	19,416	21,762	15,944	17,871	3,472	3,891	22
சராசரி	..		18,452	20,682	14606	16,372	3,846	4,310	27

மேற்கண்ட சோதனைகளின் முடிவுகள், படிமட்டங்கள் அமைத்தபின் உருளைக்கிழங்கு மகசூலில் எக்கருக்கு சராசரி 2,571 ராத்தல் முதல் 5,438 ராத்தல் வரை கூடியுள்ளதை தெளிவாக்குகின்றன. இது சாதாரண நிலங்களின் விளைச்சலைவிட 16 சதவீதம் முதல் 53 சதவீத கூடுதல் விளைச்சலாகும். படிமட்டங்கள் அமைக்கப்படும் போது நிலம் பல பகுதிகளாகப் பிரிக்கப்படுவதால், அபிவிருத்தி செய்யுமுன் இருந்த நிலத்தின் 87½ சதவீதமே சாகுபடிக்குக் கிடைக்கிறது. அதாவது படிமட்டம் அமைப்பதற்கு முன் ஒரு எக்கராக உள்ள நிலத்தில் அபிவிருத்திக்குப் பின் 7/8 எக்கர் நிலமே சாகுபடிக்குக் கிடைக்கிறது. எனவே, அபிவிருத்திக்குப்பின் எக்கரில் கிடைத்த உண்மையான சராசரி மகசூல் (18452×7/8) 14,606 ராத்தல்களாகும். எக்கருக்கு மண்வளப் பாதுகாப்பு வேலைகளுக்காக செய்யப்படும் செலவு ரூ. 500 என்று வைத்துக்கொண்டால், விவசாயி செலுத்தவேண்டிய வருட தவணைத் தொகை ரூ. 37 ஆகிறது. அபிவிருத்தி செய்யப்பட்டபின் எக்கரில் சராசரி கிடைக்கும் கூடுதல் மகசூல் 1,540 ராத்தல் மூலம் வருமானம் ரூ. 154 (200 ராத்தல் கொண்ட மூட்டை ரூ. 20 வீதம்) ஆகும். இது செய்யப்பட்ட செலவைவிட 4 மடங்கு அதிக வருமானம் ஆகும். மேலும் அபிவிருத்தி செய்வதற்கு முன் ஒரு எக்கர் நிலத்தில் அபிவிருத்திக்குப் பின் 7/8 எக்கர் சாகுபடி நிலமே சாகுபடிக்கு கிடைப்பதால், சாகுபடி செலவில் 12½ சதவீதம் குறைகிறது.

மற்ற மலைப்பகுதிகளுக்கும் திட்டவேலை விஸ்தரித்தல்: நீலகிரியில் விளைந்த நன்மைகளால், இந்தத் திட்டம் 1956-57-ல் கோடைக்கானல் பகுதிக்கும் விரிவுபடுத்தப்பட்டது. மேற்கு பழனிப் பகுதிகளில் படிமட்டங்கள் அமைத்தலும், கீழ் பழனி தோட்டப் பகுதிகளில் சமதள கற்சுவர்கள் கட்டுதலும் மேற்கொள்ளப்பட்டன. தோட்டப் பகுதிகளில் அதிக நீரை வடியவிடுவதற்கு ஆங்காங்கே பள்ளங்களும், சமதளப் பள்ளங்களும் எடுக்கப்பட்டன. ஏறக்குறைய 78,000 எக்கர் பாதிக்கப்பட்டுள்ள பரப்பளவில் 3,500 எக்கர்கள் 10·5 லட்ச ரூபாய் செலவில் விருத்தி செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளில் உருளைக்கிழங்கு, காப்பி, வாழை போன்ற பயிர்களில் 25 சத கூடுதல் விளைச்சல் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மண் அரிப்பு அதிக சேதத்தை ஏற்படுத்தி விவசாய உற்பத்திக்கு பெருந்தடங்கலாக விளங்குவதைப் பார்க்கும் போது, இதைத் தடுப்பது மிகவும் அவசியமாகிறது. மலைப்பிரதேசங்களில் நீர், நிலம் போன்றவற்றின் பராமரிப்பு அவசியமாகிறது. எல்லாரும் ஒன்றுபட்டு இதற்கு பரிகாரம் தேடவேண்டியுள்ளதால், விவசாயிகள் அனைவருடைய முழு ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. அபிவிருத்திக்குப்பின் ஏற்படும் நன்மைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதற்காக செய்யப்படும் செலவுகள் உண்மையில் அதிகமானதல்ல. ஆதலால் மலைப்பிரதேசங்களிலுள்ள சாகுபடி நிலங்கள், தோட்டப் பகுதிகள் முதலியவற்றை மண் அரிப்பினின்றும் பாதுகாக்க எல்லா விவசாயிகளும் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும். அதன் பிறகுதான் சிக்கன சாகுபடியும், உற்பத்திப் பெருக்கமும் ஏற்பட்டு, விவசாயிகளின் பொருளாதார நிலையும், நாட்டின் பொருளாதாரமும் உயரமுடியும்.

பருத்திக்கு உரமிட்டு பலன் மிக அடையுங்கள்.

(S. S. நாராயணன், பருத்தி உதவியாளர், விவசாயக் கல்லூரி, கோவை.)

நவீன விவசாயத்தில் மகசூலை இலகுவில் அதிகரிக்க உதவும் சாதனங்களில், இரசாயன உரங்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன. மேலும் தற்காலத்தில் வெளியிடப்படும் புதிய பருத்தி வகைகள் அதிக சத்துப் பொருட்களை உட்கொண்டு அதிக மகசூலைக் கொடுக்கும் சக்தியைப் பெற்றுள்ளன. பயிரின் உற்பத்தியைப் பெருக்க உரம் தேவை. ஆதலால் பருத்திப் பயிருக்கு உரமிடுதல் பற்றியும் தற்பொழுது விநியோகத்தில் இருந்துவரும் பருத்தி ரகங்களின் உரத்தேவையைப் பற்றியும் தெரிந்து கொண்டு பருத்தியின் மகசூலைப் பெருக்குமாறு பருத்தி விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் சுமார் நான்கு இலட்சம் ஏக்கராவில் கருங்கண்ணிப் பருத்தியும், சுமார் ஆறு இலட்சம் ஏக்கராவில் கம்போடியாப் பருத்தியைக் கோடை காலத்தில் இறவைப் பயிராகவும் குளிர் காலத்தில் இறவைப் பயிராகவும் அல்லது மானாவாரிப் பயிராகவும் சாகுபடி செய்யப்படுகிறது. கருங்கண்ணி வடகிழக்கு பருவ மழையைக் கொண்டு மானாவாரி பயிராக விளைவிக்கப்படுகிறது. இவையன்றி நஞ்சைத் தரிசில் குறுகிய காலப் பருத்தி இறவைப் பயிராகச் சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றில் இறவைக் கம்போடியா பருத்திக்கு உரம் இடுவது வழக்கத்தில் இருந்து வருகிறது.

ஆனால், மானாவாரிப் பருத்திக்கு உரம் இடுவது என்பது அரிது. ஆண்டுக்கு 30 அங்குலமும் அதற்கு மேலும் மழை பெய்யும் இடங்களில் மானாவாரியாகப் பயிரிடப்படும் கம்போடியா, கருங்கண்ணிப் பருத்தி ரகங்களுக்கு சிறு அளவில் இரசாயன உரமிட்டு மகசூலைப் பெருக்குவது சாத்தியம் என்று ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. கோவை, கோவில்பட்டி, ஸ்ரீவில்லிப்புத்தூர், மணப்பாறை, ஆடுதுறை முதலிய பல இடங்களில் ஆராய்ச்சிகள் நடத்தியதின் பயனால் தமிழ் நாட்டில் பயிரிடப்பட்டுவரும் பருத்தியினுசுகளுக்கு சீரிய உர அளவுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவற்றை கீழே உள்ள அட்டவணை மூலம் தெரிந்து கொள்ளலாம்:—

விவரங்கள். (1)	புரட்டாசி பட்டத்துக் கம்போடியா. (2)	மாசிப் பட்டத்துக் கம்போடியா. (3)	நஞ்சைத் தரிசில் கம்பேரடியா. (4)	கருங்கண்ணி. (5)
பொறுக்கு ரகம்.	மதராஸ்—கம்போடியா உகாண்டா 1-ம்—3-ம்.	மதராஸ்—கம்போடியா உகாண்டா 2.	பஞ்சாப்—216	கருங்கண்ணி 6.
ஏக்கருக்குத் தேவையான உரம்				
(அ) அமோனியம் சல்பேட் (கிலோ)	90	90	135	90
இடவேண்டிய காலம்	4 வாரத்தில் பாதியும் 8-வது வாரத் தில் பாதியும்.	4 வாரத்தில் பாதியும் 8-வது வாரத் தில் பாதியும்.	3-வது வாரத்தில் பாதியும் 6-வது வாரத்தில் பாதியும்.	விதைக்கும் முன்பு.
(ஆ) சூப்பர் பாஸ்பேட் (கிலோ)	170	170	90	..
இடவேண்டிய காலம்	கடைசி உழவில்.	கடைசி உழவில்.	கடைசி உழவில்.	..
கிடைக்கும் அதிக மகசூல் சத விகிதம்.	33	14	38	82
ஏக்கருக்கு கிடைக்கும் அதிக நிகர லாபம்.	ரூ. 60	ரூ. 72	ரூ. 212	ரூ. 32

மேலே கூறியுள்ளபடி பயிர்களுக்கு உரமிட்டால் அதிக மகசூல் கிடைப்பதோடு பருத்தியின் தரமும் உயர்கிறது. பருத்தி விவசாயிகளுக்கு இதனால் அதிக லாபம் கிடைக்கிறது. ஊக்கமுள்ள விவசாயிகள் பலர் பருத்திப் பயிருக்கு உரமிட்டு பலன் கண்டிருக்கிறார்கள். ஆகவே நீங்களும் பருத்திப் பயிருக்கு உரமிட்டுப் பலன் மிக அடையுங்கள்.

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் செப்டம்பர் மாதத்தில் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விபரம்.

கிடைக்குமிடம்.	கையிருப்பு.
சேலம்	2,000
திண்டிவனம்	20,000
பட்டுக்கோட்டை	8,500
உத்தமபுரம்	8,000
குடியாத்தம்	20,000
ஸ்ரீரங்கம்	5,000

கால்நடை நோய்கள் பற்றிய முன் அறிவிப்பு.

தொண்டை அடைப்பான் நோய் தஞ்சாவூர் (கிழக்கு, மேற்கு சரகங்கள்) மதுரை, நீலகிரி, செங்கல்பட்டு மாவட்டங்களில் செப்டம்பர் மாதம் தோன்றக்கூடும்.

சப்பை நோய் கோயம்புத்தூர் (கிழக்கு சரகம்) திருச்சிராப்பள்ளி (தெற்கு சரகம்) செங்கல்பட்டு மாவட்டம் ஆகிய இடங்களில் செப்டம்பர் மாதம் தோன்றக்கூடும்.

இவற்றுக்கான தடுப்பு முறைகளை மேற்கொள்ளவும்.

(தகவல் : கால்நடை சுகாதார வெளியீடு)

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 40404-64 தேதி 21-4-64 உத்தரவின்படி

1964-65 "ரேட் கான்ராக்ட்" திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட

ஸ்ப்ரேயர்கள்



'கேடார்'
அசைப்பு ஸ்ப்ரேயர்



'மாருதி'
ஃபுட் ஸ்ப்ரேயர்



'மாருத்'
கையமுத்த ஸ்ப்ரேயர்



'கேடார்-கோஃபி'
அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மார்வே ரோடு, மலாடு; பம்பாய்-64.

தமிழ்நாடு, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
75, கலாசிபாளேயம் நியூ எக்ஸ்டென்ஷன், தபால்பெட்டி நெ. 539, பெங்களூர்-2.

உங்கள் மண்ணுக்கும் நடும் பருவத்திற்கும் ஏற்ற கரும்பு நடவு முறைகளைக் கையாண்டு அதிக மகசூலை பெறுங்கள்.

எஸ். சார்லஸ் தானியேல், டி. கே. கோபால்ராவ், எஸ். வைத்தியநாதன், கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை, குடியாத்தம்.

விவசாயிக்கு பணம் சம்பாதித்துக் கொடுக்கும் பயிர்களில் (Cash crops) கரும்பும் ஒன்று. வருடா வருடம் புதிய ஆலைகள் தோன்றிய வண்ணமே இருக்கின்றன. விவசாயிகளும் கரும்புப் பயிரை அதிகமான அளவில் பயிர் செய்து நமது நாட்டின் சர்க்கரை உற்பத்தியை பெருக்கி வருகிறார்கள். மண் வகைகளுக்கும், நடும் பருவத்திற்கும் ஏற்ப நடவு முறைகளையும் மாற்றி அமைத்தல் அவசியம்.

கரணைகளை நடும் விதம்.—ஒரு எக்கரா கரும்பு நடவுக்கு 15,000 முதல் 18,000 மூன்று பருவுள்ள கரணைகள் தேவை என நீண்டகால ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கரணைகளில் இரு பருக்கள் ஒருபுறம் நோக்கியும் மற்றது அந்த இரண்டு பருக்களுக்கு நேர் எதிர்புறம் நோக்கியும் இருக்கும். கரும்புக் கரணைகள் நடும்பொழுது பருக்கள் எந்தப் பக்கத்தை நோக்கியுள்ளன என்று யாரும் பார்த்து நடுவது கிடையாது. ஆகவே, நடப்படும் போது சில கரணைகளில் (i) இரண்டு பருக்கள் மேல் நோக்கியும் ஒருபரு கீழ் நோக்கியும் இருக்கலாம்; அல்லது (ii) ஒரு பரு மேலே நோக்கியும் இருக்கலாம்; அல்லது (iii) மூன்று பருக்களும் பக்கவாட்டில் நோக்கியும் இருக்கலாம்.

மூன்று பருக்களும் பக்க வாட்டில் வரும்படியாக நடுவதால் எல்லாப் பருக்களும் முளைக்க ஏதுவாகிறது. முறை ஒன்றில் குறிப்பிட்டது போல் கரும்புக் கரணைகள் நடப்பட்டால் நடுவில் உள்ள பரு முளைத்து மேல் வருவது அதிக சாத்தியம் இல்லை. முறை இரண்டில் குறிப்பிட்டது போல் கரணைகள் நடப்பட்டால் இரண்டு பருக்கள் முளைத்து வருவது அதிக சாத்தியமில்லை.

ஆகவே, கரணைகளில் உள்ள பருக்கள் பக்கவாட்டில் இருக்கும்படியாக நடவேண்டுமானால் கரணைகளை கையில் எடுக்கும்பொழுதே கட்டை விரலால் முதல் பரு பக்க வாட்டில் இருக்கும்படி பார்த்து நட்டால் மற்ற பருக்களும் பக்கவாட்டிலேயே அமைந்துவிடும். ஒரு எக்கரா வுக்கு இரண்டு அல்லது மூன்று ஆட்கள் அதிகமான போதிலும், அதிகமான முளைப்புத்தன்மை கிடைப்பதை நோக்குங்கால் இந்த செலவு மிகையாகாது.

கரும்பு நடும் முறைகள்

(1) பார்களும் தொட்டிகளும் (Ridges & Furrows) சாதா நடவுமுறை.—கரும்பு நடவேண்டிய நிலம் நன்றாக உழுது மண் நல்ல பக்குவமடைந்த பின் 3′ 4″-க்கு ஒன்றாக பார்கள் எடுத்து தொட்டிகளில் கரும்புக் கரணைகள் நடுவது சிறந்தது என்று ஆராய்ச்சிகளின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டது.

(2) பார்த்தா நடவு முறை (Partha Method).—ஆனால் தஞ்சாவூர் ஜில்லாவில் நிலம் மிகவும் களிப்பாக இருப்பதாலும் நடவின்பொழுது மழை பெய்துக் கொண்டிருப்பதாலும் மண் நல்ல பக்குவம் அடையாமல் பார்கள் எடுப்பது மிகவும் கஷ்டமாகிவிடுகிறது. ஆகவே கரும்பு நடவேண்டிய நிலம் நெல் பயிருக்குப்பின் ஒரு தரமோ அல்லது இரண்டு தரமோ உழுது உடனே கால்கள் எடுக்கப் படுகிறது. மழை பெய்தவுடன் பார்களின் பாதி உயரத்தில் மூன்று பருக்கள் உள்ள கரணைகளில், இரண்டு பாருக்கு வெளியிலும், ஒரு பரு பாரின் உள்ளும் இருக்கும்படியாக சாய்வாக நடப்படுகிறது. புதிய பயிர் மேலே உள்ள இரண்டு பருக்களிலிருந்து முளைக்கிறது. கரும்பு பயிர் 6″ முதல் 9″ உயரம் வளர்ந்ததும் கரும்புக் கரணைகளை நிலத்தில் அப்படியே படியும்படி அழுத்தப் படுகிறது. இது திரு. பார்த்தசாரதியால் கண்டுபிடிக்கப் பட்டதால் "பார்த்தா" கரும்பு நடவுமுறை எனப் படுகிறது.

(3) கேம்பர்டுபெட் முறை (Camberedbed Method)—மேலும் தஞ்சை ஜில்லாவில் அதிகமாக மழை பெய்து தண்ணீர் தேங்கி இருக்கும். நிலங்களில் "கேம்பர்டுபெட்" என்னும் முறையைக் கையாளலாம்.

4′8″க்கு ஒரு முறை 1½′ ஆழமும் 2′ அகலமும் உள்ள கால்வாய்கள் சாய்வாக வெட்டப்படுகின்றன. வெட்டப்பட்ட மண் 4′ 8″ உள்ள பார்களின் மேல் கொட்டுவதால் குவிந்த அமைப்பைப் பெற்று ஆமையின் முதுகுபோல் தோற்றமளிக்கும்.

இந்தப் பார்களின் நடுவில் 3′ 4″ இடைவெளிவிட்டு விளிம்பிலிருந்து 8″ உள் இருக்கும்படியாக கரும்பு நடப்படுகிறது. இப்படி கரும்பு நடப்படுவதால் அதிக மழை பெய்து தண்ணீர் அதிகமாக தேங்கியபோதிலும் கரும்புக் கரணைகள் நன்றாக முளைத்து நல்ல மகசூலைக் கொடுக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது ஆகவே, அதிக மழை பெய்து தண்ணீர் தேங்கக்கூடிய இடங்களிலும் இம்முறையைக் கையாண்டு நல்ல மகசூல் பெறலாம்

(4) பக்க நடவுமுறை (Side method of Planting)—குடியாத்தம் வட்டாரத்திற்கு தனிப்பட்டம் சிறந்தது என்று கண்டுபிடிக்க செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் இப்பண்ணையில் கடந்த மூன்று ஆண்டுகளாக கரும்பு நடப்பட்டு வந்தது.

முக்கியமாக அக்டோபர் மாதங்களில் கரும்பு நடும்பொழுது தொட்டிகளில் தண்ணீர் தேங்கியும் மழை பெய்த வண்ணமாகவும் இருக்கும். இந்தப் பரிசோதனையில் கரும்புக் கரணைகள் பாரில் தொட்டியிலிருந்து 2/3 பாக உயரத்தில் மூன்று பருக்களும் மண்ணில்

(16-ம் பக்கம் பகார்க்க)

கேழ்வரகின் கொலை நோய் ஆராய்ச்சியில் கோவில்பட்டியில் கண்டறிந்த தடுப்பு முறைகள்.

பி. ஏ. முகம்மது இப்ருஹீம் (பயிர் நிபுணர்), என். ஷண்முகம், சி. பி. சுப்ரமணியம்,
எஸ். ஸ்ரீனிவாசன், என். மாரியப்பன்.

கேழ்வரகு (ராகி) தமிழ்நாட்டின் முக்கியமான சிறு தானியப் பயிர். இப் பயிர் நம் மாநிலத்தில் சுமார் 3,18,122 ஹெக்டேர்களில் சாகுபடி செய்யப்படுகிறது. பெரும்பாலும் இறவைப் பயிராகவே சாகுபடி செய்யப் படும் கேழ்வரகைத் தாக்கும் முக்கியமான நோய், கொலை நோயாகும். இந்த நோயைக் கட்டுப்படுத்தி, நோயால் ஏற்படும் சேதத்தைத் தடுக்கப் பல தடுப்பு முறைகள் கோவை விவசாய ஆராய்ச்சி கூடத்தில் கண்டறியப் பட்டுள்ளன.

பூசண நோய் ஆராய்ச்சி விரிவடைந்து வரும் இந் நாட்களில், ஒரு பிராந்தியத்தில் கண்டறிந்த தடுப்பு முறைகள், மற்றொரு பிராந்தியத்தில், பயனுள்ளதாக இருந்தும் சிறப்பாக இருப்பதில்லை. ஒவ்வொரு பிரதேசத் திலுள்ள தட்ப வெப்ப நிலை, மழை பெய்யும் காலம் அளவு, இவற்றை அனுசரித்து நோயுண்டாக்கும் பூசணங் களின் வளர்ச்சி, வலிமை, தாக்கும் திறன் மற்றும் நோயின் கொடுமை, அதனால் விளையும் சேதம் ஆகியவை மாறுபடும். இதனை உத்தேசித்தே மண்டல ஆராய்ச்சி நிலையங்களிலும் பூசண நோய் இயல் பிரிவு கடந்த மூன்றாண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. தென் பிராந் தியத்தில் தோன்றும் கேழ்வரகுக் கொலை நோய் தடுப்பு பற்றிய ஆராய்ச்சி கோவில்பட்டி மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் கடந்த இரண்டாண்டுகளாக நடத்தப்பட்டு வந்தது. பரிசோதனைப் பயிராக கே. 2. ராகி உபயோகப் படுத்தப்பட்டது. தொழு உரத்தோடு நைட்ரஜன், பாஸ் பரஸ், பொட்டாஷ் ஆகிய ரசாயன உரங்களும் இடப்பட்டன.

1963–64-ல் நடத்தப்பட்ட தடுப்பு முறைப் பரிசோதனை யில் ஐந்து பூசண நாசினி மருந்துகள் உபயோகப்படுத்தப் பட்டன. நடவு நட்டபின் ஒரு மாதத்திற்குப் பிறகு மூன்று வாரத்திற்கு ஒரு முறையாக மூன்று தடவைகள் மருந்தடிக்கப்பட்டன. 1964–65-ல் நடத்தப்பட்ட பரிசோதனை யில் ஆறுவித மருந்துகள் நடவு நட்ட மூன்று வாரத் திற்குப் பிறகு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையாக நான்கு தடவைகள் உபயோகப்படுத்தப்பட்டன. பூசண நாசினிப்பரிசோதனைகளில் கண்டறிந்த உண்மைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பூசண நாசினி மருந்துகள்.	1963-64. தானிய விளைவு ஹெக்டேருக்கு (கிலோ).	1963-64. அதிக விளைவு சதவிகிதம்.	1963-64. தாக்கப்பட்ட கதிரின் சதவிகிதம்.	1964-65. தானிய விளைவு ஹெக்டேருக்கு (கிலோ).	1964-65. அதிக விளைவு சதவிகிதம்.	1964-65. இலையில் நோயின் கடுமை அளவு.	1964-65. தாக்கப்பட்ட கதிர் சதவிகிதம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1. செரசான் சுண்ணும்பு கலவைத் தூள் .. (ஹெக்டேருக்கு கிலோ)	2,442	115	4	3,777	105	50	17
2. கந்தகத்தூள்	*	*	..	3,777	105	49	19
3. கரைசல் கந்தகம்	2,229	105	11	3,846	107	58	18
4. ஒரு சத விகித போர்டோக் கலவை ..	2,205	104	5	4,298	119	54	15
5. மருந்தடிக்காத பயிர் ..	2,128	100	7	3,587	100	66	23

* 1963–64-ல் கந்தகத் தூள் உபயோகப்படுத்தப்படவில்லை.

மேலே குறிப்பிட்டபடி 1964–65-ல் கடைப்பிடித்த முறைதான் அதிகப்பலன் கொடுத்திருக்கிறது. பூசண மருந்துகளில் ஒரு சதவிகித போர்டோக் கலவைதான் ஹெக்டேருக்கு 4,298 கிலோ அதிக தானியம் கொடுத் திருக்கிறது. மருந்தடிக்காத பயிரைவிட, ஹெக்டேருக்கு 711 கிலோ தானியம், சுமார் 19 சதவிகிதம் அதிக விளைச் சல் கிடைத்திருக்கிறது. இது தவிர போர்டோக்கலவை தெளித்த பயிரில் மருந்தடிக்காத பயிரில் விளைந்த

தட்டை நிறை 9,655 கிலோவைவிட 230 கிலோ தட்டை கூடுதலாகக் கிடைத்திருக்கிறது. போர்டோக் கலவை தெளித்ததினுல் கிடைக்கும் அதிக ஊதியம் வருமாறு :—

(அ) வருவாய்.

		ரூ. பை.
1.	ஹெக்டேரில் அதிகம் விளைந்த 711 கிலோ ராகியின் விலை (கிலோ 40 பைசா வீதம்)	284–40
2.	அதிகம் விளைந்த 220 கிலோ தட்டையின் விலை (கிலோ .. 5 பைசா வீதம்)	11–00
	மொத்தம் ..	295–40

(ஆ) செலவு.

ஹெக்டேருக்குச் சராசரி தேவையான போர்டோக் கலவை 1,250 லிட்டர் வீதம் 4 தடவைக்கு 5,000 லிட்டர். 5,000 லிட்டர் போர்டோக்கலவை தயாரிக்க 50 கிலோ துத்தம் (கிலோ ரூ. 1–75 வீதம்.) ..	87–50
50 கிலோ சுண்ணும்பு (கிலோ 25 பைசா வீதம்.)	12–50
மொத்த மருந்துச் செலவு ..	100–00
மருந்தடிக்கக் கூலி ஹெக்டேருக்கு ..	20–00
மொத்தச் செலவு ..	120–00

ஹெக்டேருக்கு—

மருந்தடித்ததால் அதிக வருமானம்	295–40
மருந்தடிக்க கூடுதல் செலவு	120–00
நிகர லாபம் ..	175–40

இதிலிருந்து நான்கு தரம் ஒரு சதவிகித போர்டோக் கலவை உபயோகப்படுத்துவதால், இலையில் காணும் நோய்க் குறிகளும், கதிர் தாக்கப்படுவதும் மிகவும் குறைந்து நோய் பெருமளவில் கட்டுப்படுத்தப்படுகிறது. இதோடு விளைவும் அதிகரித்து பயிரிலிருந்து கிடைக்கும் வருவாயும் அதிகரிக்கிறது. தண்ணீர் பற்றுக்குறையுள்ள இடங்களில் செரசான் சுண்ணும்புக் கலவைத் தூளை உபயோகிக்கலாம். 1963-64-ல் கண்ட ஆராய்ச்சியில் இது சிறந்ததாகக் காணப்பட்டது. ஆனுல் அவ்வருடம் நோய்க் கடுமை அதிகமில்லை.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக் களில் இறவைப்பட்டத்தில் ஜூலை-ஆகஸ்டில் நடவு நட்டு நவம்பர்-டிசம்பரில் அறுவடை செய்யப்படும் கேழ்வரகைத் தாக்கும் கொலை நோயைத் தடுத்து அதிக மகசூல் அடையும்படி விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

(14-ம் பக்கம் தொடர்ச்சி)

பதியும்படி நடப்பட்டது. தொட்டிகளில் தேங்கிய தண்ணீரை கால்வாய் (Irrigation Channels) மூலம் வடிய ஏற்பாடு செய்யப்பட்டது. கரணைகள் பாரின் பக்கவாட்டில் மேற்பகுதியில் இருந்ததால் 60 சதவீதம் பருக்களுக்கு மேல் முளைத்து நல்ல மகசூல் எடுக்க ஏதுவானது.

ஆகவே, மணல் பூமியிலும், மழை இல்லாத காலங்களிலும் கரும்புக் கரணைகளை தொட்டியில் நடவேண்டும். ஆனுல் மழை காலங்களில் மணலும் களிப்பும் கலந்த (Loamy) நிலங்களில் கரணைகளை பார்களின் 2/3 உயரத்தில் நடவேண்டும். களிப்பான நிலங்களில் "பார்த்தா" முறையை கையாளலாம். அதிகமாக தண்ணீர் தேங்கக் கூடிய பூமிகளில் "கேம்பர்டுபெட்" முறையை கையாளுவதால் நல்ல முளைப்புத்தன்மை பெற்று அதிக மகசூலை பெறமுடியும்.

கரும்புக் கரணைகள் நடவேண்டிய ஆழம்.—மணற்பாங்கான (Sandy) பூமிகளில் கரும்புக் கரணைகளை தொட்டிகளில் 4″ முதல் 6″ ஆழத்திலும், கொஞ்சம் களிப்பாக மணலும் களிப்பும் கலந்த நிலங்களில் (Loamy) 2″ முதல் 4″ ஆழத்திலும், களிப்பான நிலங்களில் (clayey) 1″ முதல் 2″ ஆழத்தில் நடவேண்டும்.

மணற்பாங்கான பூமிகளில் மேலாக நட்டால் போதிய ஈரம் இல்லாமல் முளைக்கும் பயிர்கள் காய்ந்துவிடுகின்றன. ஆனுல் மிகவும் களிப்பான பூமியில் ஆழமாக நட்டால் பருக்கள் இலகுவில் முளைத்து வெளியில் வர இயலாமல் அழுகிப்போய் விடுகிறது.

மேற்கூறிய கரும்பு நடவு முறைகளைக் கையாண்டு கரும்பின் முளைக்கும் தன்மையை அதிகப்படுத்துவதோடல்லாமல் கரும்பின் மகசூலையும் அதிகமாக்கலாம்.

பிழைத் திருத்தம்

1965-ம் வருடம் ஆனி இதழில் வெளியிடப்பட்ட "கரும்பின் எருச் செலவில் சிக்கனம்" என்ற கட்டுரையில் பக்கம் 25-ல் "இதன்படி 1 கிலோ யூரியாவை 4 காலன் தண்ணீரில்" என்றிருப்பதை "இதன்படி 1 கிலோ யூரியாவை 8 காலன் தண்ணீரில் கரைத்து தேவையான அளவிற்கு தெளித்துக்கொள்ளலாம்" என்று திருத்திக் கொள்ளவும்.

பசிப்பிணியிலிருந்து நிவாரணம்

நில வளமே உங்கள் செல்வம்

நில வளமோ, மண்ணிலிருந்து கிடைக்கக்கூடிய தாவர உணவுப் பொருட்களான

நைட்ரஜன்

பாஸ்பாரிக் அமிலம், மற்றும்

பொட்டாஷ்

ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது. பயிர்களால் உறிஞ்சி எடுத்துக் கொள்ளப்படும் இம் மூன்று போஷாக்குச் சத்துக்களையும் திரும்பவும் அளிப்பதின் மூலம், மண் வளமும், அதன் மூலம் உங்கள் நல் வாழ்வும் பாதுகாக்கப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக உணவுப் பிரச்னையிலிருந்து விமோசனம் கிடைக்கிறது

இலவச ஆலோசனைகள், பிரசுரங்கள் மற்றும் பயிர்களுக்கு உரமிடுதலைப் பற்றிய குறிப்புகள் ஆகியவை கிடைக்குமிடம் :

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்சி லிமிடெட்

8/9, தம்புசெட்டி தெரு, சென்னை - 1

IP.G.25TA



வானொலிச் செய்திகள்

அன்புள்ள விவசாயப் பெருமக்களே,

"கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்" ஒலிபரப்பப் படும் நேரத்தில் செய்யப்பட்டுள்ள மாறுதலை நீங்கள் அனைவரும் சென்ற இதழில் படித்து அறிந்துக் கொண்டிருப்பீர்களென்று நம்புகிறேன். தற்போது **செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இரவு 7-30 முதல் 8-00 மணி வரை** ஒலிபரப்பப்படும் 'கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளை' நீங்கள் தவறாமல் கேட்டுப் பயனடையுமாறு வேண்டுகிறேன்.

'கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளின்' சிறப்பான பணியை பிறநாட்டினரும் கண்டு வியந்துள்ளனர். நம் நாட்டில் சுற்றுப் பயணம் செய்த லைபீரியா நாட்டு செய்தி அலுவலர் திரு. பெர்னார்ட் டென்னி என்பவருடன், நான் நடத்திய பேட்டி இதைத் தெளிவாக எடுத்துக்காட்டியது. பேட்டியின் விவரம் பின்வருமாறு :—

வானொலி விவசாய அலுவலர்.—வணக்கம் திரு. டென்னி அவர்களே ! தங்கள் வரவு நல்வரவாகுக.

பெர்னார்ட் டென்னி.—வணக்கம் திரு. நைட் அவர்களே !

வா.வி.அ.—நீங்கள் பிப்ரவரியிலிருந்து இங்கு இருக்கிறீர்கள் அல்லவா ?

டென்னி.—ஆம் ! பிப்ரவரி 12-ந் தேதி நாங்கள் இந்தியாவிற்கு வந்து சேர்ந்தோம்.

வா.வி.அ.—தங்கள் லைபீரியா நாட்டைப் பற்றி கொஞ்சம் கூறுவீர்களா ?

டென்னி.—லைபீரியா நாடு ஆப்பிரிக்காவின் மேற்கில் அமைந்துள்ளது. இங்கு கல்விக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இரண்டாவதாக விவசாயம். லைபீரியாவில் நிறைய மக்கள் விவசாயத்தில் ஈடு பட்டுள்ளனர். எங்களுடைய முக்கிய உணவு அரிசி யாகும். நெல்லுடன் காபி, கொக்கோ, காய்கறிகள் பயிர் செய்யப்படுகின்றன. எங்களுடைய வியாபாரப் பயிர் ரப்பர் ஆகும். நிலங்கள் மண்வளம் வாய்ந்ததாகும். ஆனால் போதிய கல்வி வசதியில்லை. நிலத்தை பண்படுத்தி நெல்லை விதைக்கின்றனர். எருதுகளை பயன்படுத்துவதில்லை. எருதுகளை இறைச்சிக்காகத்தான் பயன்படுத்துகிறோம். விவசாயிகளுக்கு நிலங்கள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. நிலத்தை வாங்க விவசாயிகளுக்குப் பணமில்லையென்றால், அரசாங்கத்துக்கு எழுதினால், அரசாங்கம் தேவையான அளவு நிலம் கொடுத்துதவுகிறது. இந்த வகையில் நாங்கள் உணவு உற்பத்தி செய்து, பக்கத்து நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறோம்.

வா.வி.அ.—எங்களுடைய கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அதைப்பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறேன்.

டென்னி.—தஞ்சாவூரில் ஒரு கிராமத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளைக் கேட்கச் சென்றோம். 20 பேர் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளைக் கேட்டுக்கொண்டிருப்பதைக் கண்டோம். ஒலிபரப்புக்குப்பின், அந்த மன்றத்தின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் விவாதத்தில் பங்கு கொண்டனர். ஒலிபரப்பப்பட்ட பேச்சின் மீது சிறப்பான விவாதம் நடத்தப்பட்டது. விவாதத்திற்குப் பின் நிறைய கேள்விகள் கேட்கப் பட்டன. இத்தகைய காட்சியை இங்குதான் முதன் முதலாக கண்டேன். ஒன்றை பூனாவில் கண்டேன் ; பெங்களூரிலும் கண்டேன். ஆனால் அங்கெல்லாம் ஒரு சிலரே பங்கெடுத்துக்கொண்டனர். 50 பேர் உள்ள மன்றத்தில் கொஞ்சம் பேரே பங்கு கொண்டனர். ஆனால் இங்கு ஒவ்வொரு அங்கத்தினரும் பங்கு கொண்டனர். விவசாயிகள் லைபீரியாவைப் பற்றி கொஞ்சம் தெரிந்துக்கொள்ள ஆசைப்பட்டனர். அவர்கள் கேள்விகள் கேட்க, நான் பதில் கொடுத்தேன். அவர்கள் லைபீரியாவைப் பற்றி தெரிந்துக் கொண்டதற்கு மிகவும் சந்தோஷப்பட்டு லைபீரியாவிலிருந்து முதன் முதலாக ஒருவரை இப்போதுதான் பார்ப்பதாகக் கூறினார்கள். இரண்டாவது நாள் மறுபடியும் மற்றொரு ஊரைப் பார்க்கச் சென்றோம். அங்கு விவசாயிகளுக்காக ஒலிபரப்பப் படும் நிகழ்ச்சிகளைக் கேட்டோம். 5 பேர் பங்கு கொண்டனர். பின் விவாதம் செய்தனர். அங்கு 2 மணி நேரம் கழித்தபின் மற்றொரு ஊருக்குப் புறப்பட்டோம். அங்கு பெண்களுக்கான ஒலிபரப்பைக் கேட்டோம். அந்த ஒலிபரப்பும் சிறப்பாக இருந்தது. அது முடிந்தபின், தங்குமிடத்திற்குச் சென்று, இந்திய முறையில் தயாரிக்கப்பட்ட உணவை உண்டோம். மாவட்ட தலைவரையும், மற்ற அலுவலர்களையும் கலந்து பேசினோம். அந்த நாள் முழுதும் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளை கேட்பதிலேயே எங்கள் பொழுது கழிந்தது. இதையெல்லாம் பார்க்கும்போது சென்னை மாகாண சர்க்காரின் சிறப்பான பணிகளை உணரமுடிகிறது.

வா.வி.அ.—இதுவரை நீங்கள் அளித்த பேட்டிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டென்னி.—மிக்க நன்றி !

மேற்கண்ட பேட்டியிலிருந்து கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளின் சிறப்பு நன்கு வெளிப்படுகிறது. அதை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய ஆலோசனை கள் நீங்கள் எழுதி அனுப்பலாம்.

உங்கள் நலனைக் கருதும்,

அ. ஜான்நைட்.

வானொலி விவசாய அலுவலர்.
36-B, மௌண்ட் ரோட்,
சென்னை-2.

சென்ற மாதத்தில் நீங்கள் கேட்ட நிகழ்ச்சிகளில் நினைவில் கொள்ள வேண்டியவை.

சி. எஸ். எச். 1. சோளம் பயிரிடுங்கள்

தமிழ்நாட்டில் சுமார் 18 லட்சம் ஏக்கரில் சோளம் பயிரிடப் படுகிறது. பெரும்பகுதி மானவாரியாகவும், சுமார் 4 லட்சம் ஏக்கர்களில் கோடைப் பருவத்தில் பாசன உதவியோடும் சோளம் சாகுபடி செய்யப்படுகிறது. மாசி முதல் சித்திரை வரையில் அந்தந்த மாவட்டங்களில் அனுபவத்திற்கும் பருவத்திற்கும் ஏற்றவாறு விதைப்புக் காலம் மாறு படுகிறது. குறுகிய காலத்தில் அதிக மகசூல் தரும் கோ. 18 சென்ற ஆண்டு வரை கோடைப் பருவத்தில் அதிகமாகப் பயிரிடப்பட்டு வந்தது. ஆனால் அண்மையில் மத்திய—மாநில அரசாங்க ஆராய்ச்சிப் பிரிவுகளின் கூட்டு முயற்சியில், அமெரிக்க ராக்பெல்லர் ஸ்தாபனத் தாரின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட வீரிய சோளம் சி. எஸ். எச். 1 கோடைச் சாகுபடிக்கு மிகவும் ஏற்ற பொறுக்கு வித்தாகும்.

தன்மையில் மாறுபட்ட இரண்டு இனங்களைக் கூட்டுச் சேர்க்கும்போது, அதன் விளைவாகத் தோன்றும் சந்ததியில் ஒரு புது வீரியம் சில சூழ்நிலைகளில் வெளிப் பட்டு, விளைச்சலை அதிகரிக்கிறது. இந்த அடிப்படையில் நடத்தப்பட்ட சோளம் ஆராய்ச்சியில் விளைந்ததுதான் வீரிய சோளம் சி. எஸ். எச். 1. சென்ற ஆண்டு கோடைப் பருவத்தில் கோயமுத்தூர், சேலம், திருச்சி, வட ஆற் காடு, மதுரை, தென் ஆற்காடு மாவட்டங்களில் கோ. 18, உள்ளூர் சோளம் முதலியவற்றுடன் புதிய வீரியச் சோளம் பயிரிடப்பட்டு ஒப்பு நோக்கப்பட்டபோது, கோ. 18 ரகத்தை விட இது 61 சதவீதம் அதிக விளைச்சலைக் கொடுத்தது.

இந்த வகை தமிழ் நாட்டில் எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தும் என்றாலும், குறிப்பாக கோயமுத்தூர், திருச்சி, சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங் களுக்கும், மதுரை மாவட்டத்தின் சில பகுதிகளுக்கும், சிறப்பாகப் பொருந்தும். இதுவரை நடந்துள்ள சோதனைகளின்படி ஏக்கருக்கு 10 முதல் 20 வண்டி தொழு உரமும், 86 கிலோ சூப்பரும், 136 கிலோ அம்மோனியம் சல்பேட்டும் இப்புதிய ரகத்திற்கு இட்டால் ஏக்கருக்கு ரூ, 300 வரை அதிக லாபம் பெறலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

விளைச்சலில் மட்டுமின்றி சிறப்பான வேறு பல தன்மை களையும் சி. எஸ். எச், 1 கொண்டுள்ளது. இதன் வயது மூன்று மாதங்கள்தான்; உயரம் சுமார் ஐந்தடி. பெருங்காற்றுக்கும் சாயாத தன்மையுடையது. இதன் தண்டு இலைச்செறிவாகவும், சாறு நிறைந்தும் இருப்ப தால் நல்ல தீவனமாகப் பயன்படும். கதிர் நெருக்கமாக இல்லாமல் தளர்ந்தும் இருப்பதால் அறுவடை சமயத் தில் மழை பெய்தாலும், மகசூலுக்கு சேதம் இருக்காது. இதன் தானிய மணிகள் நீரோட்டமாக வெளுத்த நிற முடையவை. உருவத்திலும் கனத்திலும் திடமானவை. உணவுக்கு உகந்தவை.

இது அதிக உரமேற்று, அதிக விளைச்சல் தரக்கூடிய தாகும். இந்த உரம் ஏற்கும் திறமையால் ஏக்கருக்கு 3,000 கிலோ வரை தானிய விளைச்சலைத் தந்துள்ளது. இதிலிருந்து விதையெடுத்து அடுத்த பட்டத்திற்கு உபயோகிக்கக்கூடாது. இதற்காக மத்திய அரசினரின் தேசீய விதை உற்பத்தி நிலையமும், மாநில அரசும் ஒத்துழைத்து இந்த வீரிய சோளத்தின் விதைகளை பெரு மளவில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க திட்ட மிடப்பட்டுள்ளது. விதை கிடைக்கும இடங்களைப் பற்றிய விவரங்களுக்கு:—சிறுதானிய நிபுணர், கோவை—3, என்ற முகவரிக்கு எழுதித் தெரிந்துக் கொள்ளுங்கள்,

(2—7—65 அன்று கோவை சிறுதானிய நிபுணர் திரு எ. சண்முகசுந்தரம் அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்).

நெல் பயிருக்கு உரமிடல்.

தாவர வளர்ச்சிக்கு தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து மூன்றும் அதிக அளவில் தேவைப்படுகின்றன. நமது முக்கிய உணவுப் பயிரான நெற்பயிருக்கு ஏராளமான அளவு தழைச்சத்து உரம் தேவை. உஷ்ணப் பகுதியான நம்நாட்டு நிலங்களில் கரிமப் பொருள்களும், தழைச் சத்தும் வெப்பத்தால் சுலபமாக அழிந்து விடுவதால் உரமிடும்போது தழைச்சத்துக் குறைவை ஈடு செய்வது மிகவும் முக்கியமாகும்.

காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து நிலத்தில் படிய வைக்கும் ஆற்றல் பெற்ற தழை உரப் பயிர்களை நிலத் திலேயே வளர்த்து, மடக்கி உழுது மக்கச் செய்வது நெற்பயிருக்கு உரமிட ஒரு சிறந்த வழியாகும். மணல் வாட்ட நிலங்களுக்கு கொளுஞ்சி, இருமண் நிலங் களுக்கு சணப்பு அல்லது செஸ்பேனியா, களிமண் நிலங்களுக்கு பில்லிப்பயறு, களர் நிலங்களுக்கு தக்கைப் பூண்டு போன்ற பயிர்கள் சிபாரிசு செய்யப்படுகின்றன. இப்பயறு வகை பயிர்களில் உண்டாகும் சில அமிலங்கள் பயிர்கள் உட்கொள்ள முடியாத சில உரச்சத்துக்களை, பயிர்களுக்கு கிட்டும் உணவுப் பொருளாக மாற்றுகின்றன.

தழை உரத்துடன், இரசாயன உரங்களையும் நெல் பயிருக்கு இடுதல் வேண்டும். நிலத்தின் தரம், உரத்தின் அளவு. இடும் முறை, காலம் இவற்றை நன்றாக அறிந்து உரமிடுதல் அவசியம். நடவுக்கு முன் நிலத்தில்

போடும் உரம் பயிரின் ஆரம்ப வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படும். பயிரில் கதிர்கள் நன்கு வெளிவராது, பயிரின் வளர்ச்சியில் ஒரு தயக்க நிலை காணப்படும்போது, அமோனியம் சல்பேட் போன்ற ஊட்ட உரத்தை சிறிதளவு இடவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் புழுதி நாற்றங்காலுக்கு ஏக்கருக்கு 10 டன் தொழு உரமும், சேற்று நாற்றங்காலுக்கு 5000 கிலோ தழையுரமும் இடலாம். பயிர் நலிந்து காணப்பட்டால், ஒரு சென்டுக்கு ஒரு ராத்தல் அமோனியம் சல்பேட் தூவி நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

நடவு வயலில் ஏக்கருக்கு 5,000 ராத்தல் தழையுரம் நடவுக்கு 10—15 நாட்களுக்கு முன்னர் போட்டு உழ வேண்டும். கடைசி உழவுக்கு முன் ஏக்கருக்கு 200 ராத்தல் சூப்பர் பாஸ்பேட் போட்டு உழவேண்டும். மணற்பாங்கான நிலங்களுக்கு சூப்பருடன் ஏக்கருக்கு 27 ராத்தல் மியூரியேட் ஆ. ∴ப் பொட்டாஷ் போடுவது அவசியமாகும். நடவுக்கு முன் ஏக்கருக்கு 75 ராத்தல் அமோனியம் சல்பேட் போடவேண்டும். நட்டபின் குருவை பயிருக்கு 25 நாட்களிலும், சம்பா தாளடிப் பயிர்களுக்கு 40 முதல் 50 நாட்களிலும் 75 ராத்தல் அமோனியம் சல்பேட் மேலுரமாக இடவேண்டும்.

கடலோரப் பகுதிகளில் பழக்கத்திலுள்ள ஊடு சாகுபடி முறையில், குருவை அறுவடைக்குப் பின் துளிர்த்து வரும் ஒட்டடன் பயிரில் அதிக மகசூல் பெற ஏக்கருக்கு 100 ராத்தல் அமோனியம் சல்பெட் இட வேண்டும்.

குருவைப் பயிருக்கு தொழு உரம் அல்லது தழை உரம் சிறந்ததெனவும், தாளடிப் பயிருக்கு ரசாயன உரம் அல்லது தழையுரம் சிறந்ததெனவும் தெரிகிறது. அமோனியம் சல்பேட், யூரியா கால்சியம், அமோனியம் நைட்ரேட், அம்மோனியம் க்ளோரைட் முதலியவை அனைத்தும், மண் சமநிலையில் இருக்குமானால் திறனுடையதாக, ஆராய்ச்சி முடிவுகள் சுட்டிக்காட்டின. உரமிடுவதன் மூலம் குருவை சம்பா பயிர்களில் ஏக்கருக்கு 925 ராத்தலும், தாளடியில் 1,585 ராத்தலும் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிகிறது. அதிக உரமிட்டு உற்பத்தியைப் பெருக்க அதிக உரமேற்கும் தன்மை கொண்ட ஆடுதுறை 27 ரகத்தை பயிர் செய்ய வேண்டும். நீண்டகாலப் பயிர்களில் கோ. 25-க்கு அதிக உரமிடலாம்.

தேர்ந்தெடுத்த பொறுக்கு விதை, காலம், அளவு, முறை தெரிந்து உரமிடல், தகுந்த பயிர்ப்பாதுகாப்பு செய்தல் போன்றவற்றால் ஏக்கருக்கு சராசரி 1,350 ராத்தல் உள்ள அரிசி உற்பத்தியை 2,250 ராத்தலாக உயர்த்த முடியும்.

[9—7—65 அன்று திரு. ஏ. சுப்ரமணியம் பயிர் நிபுணர் (ஆடுதுறை) அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்].

16—7—65 அன்று ஒலிபரப்பப்பட்ட திரு. எஸ். எம். சுலைமான், விவசாய கூட்டு நெறியாளர் அவர்களின் "பசுந்தாள் பயிரை வளர்ப்பீர்" வானொலி உரை முழுதும் ஐந்தாம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

நெற்பயிரில் விழும் முக்கிய பூச்சிகளும், பூஞ்சாண நோய்களும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்

நெற்பயிருக்கு சுமார் 10 முதல் 20 சதம் வரை பூச்சிகள் நோய்கள் முதலியவற்றால் சேதம் ஏற்படுகின்றன என்று தெரிகிறது. விதையிலும், நாற்றங்காலிலும், நட்ட பயிரிலும் சேதம் ஏற்படாமலிருக்க பயிர்ப்பாதுகாப்பு செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

விதை.—விதைக்கு அந்துப் பூச்சியினாலும், சிறுவண்டுகளாலும் சேதம் ஏற்பட்டு மூளைப்பு பாதிக்கப்படுகிறது. இதைத் தடுக்க விதைகளை நன்றாகக் காயவைத்து சேமித்து வைக்கவேண்டும். விதைப்பதற்கு முன்னால் பூஞ்சான நாசினி மருந்துடன் கலந்து விதைக்கவேண்டும்.

நாற்றங்கால்.—நாற்று பறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னால் 200 லிட்டர் தண்ணீரில் 100 மில்லி லிட்டர் பாரதியான் அல்லது 100 லிட்டர் தண்ணீரில் 100 மில்லி லிட்டர் என்டிரின் மருந்தும், ½ கிலோ தாமிர பூஞ்சாணங் கொல்லி மருந்தும் கலந்து தெளிக்க வேண்டும். பேன், பச்சைத் தத்துப்பூச்சி, திரிப்ஸ் போன்றவைகளைக் கட்டுப்படுத்த பி. எச். சி. 10 சத மருந்துடன், டி.டி.டீ. 5 சத மருந்தை சமமாகக் கலந்து ஏக்கருக்கு 9 கிலோ வீதம் தூவவேண்டும்.

பயிர்.—நட்ட பயிரின் மேல் மஞ்சள் இறக்கைகளுள்ள அந்துப்பூச்சி முட்டையிடுகின்றன. இவற்றிலிருந்து வெளி வரும் சிறு புழுக்கள் குருத்தைத் துளைக்கின்றன இதனால் குருத்து காய்ந்து விடுகிறது. தடுப்பு முறையாக பாரதியான் அல்லது என்டிரின் மருந்தை பயிர் நட்ட பின்பும், கதிர்விடும் பருவத்துக்கு முன்பும் தெளிக்கவேண்டும்.

தத்துப்பூச்சிகளின் தாக்குதலால் பயிர் வெளுத்து வளர்ச்சி குன்றியிருக்கும். இதைக் கட்டுப்படுத்த பி.எச்.சி. 10 சதம் டி.டி.டீ. 5 சதம் இரண்டையும் சமமாக கலந்து தூவவேண்டும்.

ஒருவித மாவுப்பூச்சிகள் தண்டிலுள்ள சத்தை உறிஞ்சுவதால் சூரை ஏற்படுகின்றது. தேன்நிறமுள்ள பூச்சிகள் மாவு போன்ற வெள்ளை நிறவஸ்துவுடன் கலந்து தெரியும். ஆரம்பத்திலேயே இரட்டிப்பு அளவு வீரியமுடைய பாரதியான் மருந்தை (100 மில்லி லிட்டர் மருந்து 100 லிட்டர் தண்ணீரில்) தெளிக்க வேண்டும். இலைகளைத் தின்று சேதப்படுத்தும் வெட்டுக் கிளிகளை பி.எச்.சி. 10 சதம் தூளை ஏக்கருக்கு 9 கிலோ தூவி கட்டுப்படுத்தலாம். வடிகால் வசதி இல்லாத இடங்களில் இலைகளை சுரண்டி சேதப்படுத்தி கொக்கி நோய் ஏற்படச் செய்யும் தொங்கும் புழுவைக் கட்டுப்படுத்த பி. எச். சி. 10 சதம் தூவலாம்; பாரதியான் மருந்தும் தெளிக்கலாம். ஒருவித ஈயின், புழு தண்டுக்குள் வளர்வதால் ஆனைக்கொம்பன் ஏற்படுகிறது. இதைத் தடுக்க பாரதியான் அல்லது

என்டிரின் தெளிக்கலாம். கதிர் பால் பிடிக்கும் பருவத்தில் தோன்றி சேதமேற்படுத்தும் நாவாய்ப் பூச்சியைக் கட்டுப்படுத்த பி.எச்.சி. 10 சதம் தூவலாம். புகையான் பூச்சிகள் தண்டினுள்ள சத்தை உறிஞ்சி சேத மேற்படுத்துகின்றன. இதைத் தடுக்க பி.எச்.சி. 10 சதம் தூவலாம்.

அதிக சேதம் ஏற்படுத்தும் எலிகளை வரப்புகளை வெட்டி பிடித்தும், கிட்டிகள் வைத்துப் பிடித்தும் கொல்ல வேண்டும். பாஷாணம் கலந்த உணவை வைத்தும் கொல்லவேண்டும்.

நோய்கள்.—நாற்றங்காலில் ஏற்படும் தூர் அழுகல் நோயைத் தடுக்க விதைகளை கரிம பாதரச மருந்தில் கலந்து விதைக்கவேண்டும். இலைப்புள்ளி நோய், இலை நோய் முதலியவை வராமல் தடுக்க ½ கிலோ தாமிர பூஞ்சாணங்கொல்லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். குலைநோய் தாக்காத நெல் ரகங்களைப் பயிரிடவேண்டும்.

பூச்சிகள் நோய்கள் முதலியவற்றால் சேதம் ஏற்படாமலிருக்க நாற்று பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பும், நட்டபின் 15 நாட்கள் கழித்தும், நட்டபின் 45 நாட்கள் கழித்தும் பாரதியான் அல்லது என்டிரினுடன் தாமிர பூஞ்சாண கொல்லி மருந்தை கலந்து தெளிக்க வேண்டும்.

(23—7—65 அன்று தஞ்சாவூர் தீவிர விவசாய மாவட்ட திட்டப் பயிர்ப் பாதுகாப்பு நிபுணர் திரு. கே. ஆர். நாகராஜ ராவ் அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்.)

காய்கறி உற்பத்தியைப் பெருக்குவீர்!

உடலுக்கு ஊட்டம் தர, உண்ணும் உணவில் காய்கறிகள் அதிகமாக இருக்கவேண்டும். இரும்பு, மக்னீசியம் கந்தகம், அயோடின் போன்ற தாது உப்புக்களும், ஏ.பி.சி. போன்ற உயிர்ச்சத்துக்களும் காய்கறி வகைகளில் அதிகமாகக் கிடைக்கின்றன. நாளொன்றுக்கு சராசரி 10 அவுன்ஸ் காய்கறிகள் நம் உணவில் சேர்க்கப்பட வேண்டும். ஆனால் தற்போது சராசரி 3 அவுன்ஸ்தான் உட்கொள்ளப்படுகிறது. எல்லா இடங்களிலும் பயிராகும் அரைக்கீரை, முளைக்கீரை, பருப்புக்கீரை, முருங்கை, அகத்தி, சக்கரவர்த்திக்கீரை, பசலைக்கீரை, போன்றவைகளும், மலைப்பிரதேசங்களில் வளரும் லெட்டுஸ்கீரை, முட்டைக் கோஸ், ஓமக்கீரை, சாலட்கீரை, போன்றவைகளும், கத்திரி, வெண்டை, முள்ளங்கி, தக்காளி, வாழை, பப்பாளி, அவரை, புடல், பாகல், சுரை, பீர்க்கு முதலிய காய்கறி வகைகளும், பனிக்காலத்தில் பயிரிடப்படும் பட்டாணி, பீன்ஸ், காரட், பூக்கோஸ், நூல்கோல் வகைகளும் நம் உடலுக்கு உரமூட்டி பயன்தரும் பயிர்களாகும்.

எல்லாவகைக் காய்கறிகளும் குறுகிய காலப் பயிர்கள் ஆகும். நல்ல உரமிட்டு, பராமரிப்புடன் சாகுபடி செய்தால் அதிக மகசூலும் (5,000 முதல் 10,000 கிலோ வரை) வருவாயும் (ரூ. 1,500 முதல் ரூ. 3,000 வரை) ஏக்கருக்கு தருபவை ஆகும். சென்னை, மதுரை, திருச்சி கோவை, நெல்லை, குமரி மாவட்டங்களில் சுமார் 30 மைல் சுற்றளவில் உள்ள வட்டாரங்களில் காய்கறி சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ. 120 வீதம் தக்காவிக் கடன் வழங்கப்படுகிறது. இது ரொக்கமாகவும், இரசாயன கலப்புரமாகவும், பூச்சி பூஞ்சாண மருந்துகளாகவும் வழங்கப்படுகிறது. இது 5¼ சதவீத வட்டியுடன் பயிர்க்காலம் முடிந்தவுடன் வசூலிக்கப்படுகிறது.

விவசாயக் கிடங்குகள் மூலம் பூச்சி பூஞ்சாண மருந்துகள் சகாய விலையில் பெறவும், மருந்து தெளிப்பான்கள், தூவும் கருவிகள் குறைந்த வாடகையில் அளிக்கவும், கலப்புரம் எண் 5 அல்லது 6 கூட்டுறவு வாங்கிகள் மூலம் வழங்கவும், பிரத்தியேக விவசாய விளக்குனர்கள் மூலம் நிருபணங்கள் போட்டு விளக்கி வேண்டிய ஆலோசனைகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தை தஞ்சை, வேலூர், ஈரோடு, சேலம் முதலிய இடங்களுக்கும் விரிவாக்க திட்டமிடப்பட்டுள்ளது நீலகிரி, கோடைக்கானல், சேர்வராயன் மலைப்பகுதிகளில் வெளிநாட்டு காய்கறிகள் சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ. 200 வீதம் குறுகிய காலத் தக்காவிக் கடன்கள் ரொக்கமாகவும், உரமாகவும், பயிர்பாதுகாப்பு மருந்துகளாகவும் வழங்கப்படுகின்றன. சென்னையில் காய்கறி விநியோகம் செய்ய குளிர் சாதனம் கொண்ட லாரி வாங்கவும், காய்கறிகளைச் சேமிக்க குளிர் சாதனக் கிடங்கு கட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, மதுரை, திருச்சி, நெய்வேலி போன்ற நகரங்களில் வீடுகள், பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றில் காய்கறித் தோட்டங்கள் செய்யவும், ஆலோசனை வழங்கவும், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வீட்டுத் தோட்டத்தை நன்றாகக் கொத்தி, தொழு உரம், சூப்பர் முதலியவற்றை இடவேண்டும். தோட்டத்தை பல பகுதிகளாகப் பிரித்து, பருவத்திற்கேற்ற காய்கறிகளைப் பயிர் செய்ய வேண்டும். பாத்திகளின் ஓரத்தில் முள்ளங்கி, கீரை, கொத்தமல்லி போன்றவற்றை பயிர் செய்யவேண்டும். வேலியின் மீது படரும் கொடி வகைப் பயிர்களை (பீர்க்கன், பசலை) படர விடலாம். பயிர் காலத்தில் வேண்டிய பயிர்ப்பாதுகாப்பும், பராமரிப்பும் செய்யப்படவேண்டும்.

அதிக விளைச்சல் தரும் பூசாசவானி, குடியாத்தம் கத்தரி, குன்னூர் பச்சைத்தக்காளி, கோயம்புத்தூர் பாகல், டி. எல். அவரை தினுசுகள் போன்றவற்றை சாகுபடி செய்து நிறைய லாபம்பெற வேண்டும். பொறுக்கு விதைகளை உற்பத்தி செய்ய கோவையில் விதை நிறுவனமும், மற்ற விவசாய ஆராய்ச்சி நிலையங்களும் ஈடுபட்டுள்ளன. எல்லா வட்டாரங்களிலும் பாதி விலையில் விதைகள் விநியோகம் செய்வதை விவசாயிகள் பயன்படுத்தி காய்கறி உற்பத்தியை பெருக்கவேண்டும்.

(30—7—65 அன்று சென்னை பிரத்யேக மாவட்ட விவசாய அலுவலர் (காய்கறிகள்), திரு. எஸ். விநாயகம் அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்.)

நீங்கள் கேட்கப்போகும் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்

(வெள்ளிக்கிழமை தோறும் இரவு 7-30 முதல் 8-00 மணிவரை திருச்சி, சென்னை-எ, திருநெல்வேலி நிலையங்களில் கேளுங்கள்).

3–9–65

விவசாயத்தில் காலநிலை

அதன் அவசியமும் பலாபலன்களும் காலநிலை எவ்வாறு நாம் அறியலாம்—முன்னெச்சரிக்கை என்னென்ன செய்யலாம்—அதனால் நாம் அடையும் பலன்களாவன.

சி. பாலசுப்பிரமணியம், விவசாய அலுவலர், கோவை

10–9–65

தாளடி நெல்பயிருக்குத் தீவிர சாகுபடி முறைகள்

தாளடி—பொறுக்கு விதைகள்—நாற்றங்கால் தயாரிப்பு—வயலைத் தயாரிக்க வேண்டிய அவசியம்—உரமிடுதல், பயிர் பாதுகாப்பு முறைகள்—முடிவுரை.

வி. வெங்கட சுப்ரமணியம், மாவட்ட விவசாய அலுவலர், தீவிர விவசாய மாவட்ட திட்டம், தஞ்சாவூர்.

17–9–65

தென்னை நட்டு பலனடைவீர்!

தென்னையின் பலன்களாவன—தென்னை வகைகள்—தற்போது நாம் தென்னையை பாதுகாக்கும் முறை—அதன் பலன்கள்—தென்னை நெற்றுகளை தேர்ந்தெடுக்கும் முறை—நாற்றுகளை தேர்ந்தெடுக்கும் முறை—நடும் முறைகள்—நாற்று நட்டபின் 5 முதல் 7 வருடங்கள் வரை—அதாவது பலன் கொடுக்கும் வரை—உரமிடுதல்—பயிர்ப் பாதுகாப்பு—அரசாங்கத்தால் அளிக்கப்படும் சலுகைகள்.

ஜி. துரைசாமி தென்னை விஸ்தரிப்பு அலுவலர் பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்.

24–9–65

கலப்பு உரமிட்டு சிறந்த பலனடைவீர்!

கலப்பு உரத்திற்கும் மற்ற உரத்திற்கும் உள்ள வித்தியாசம்—கலப்பு உரம் என்றால் என்ன? என்னென்ன கலப்பு உரங்களை என்னென்ன பயிர்களுக்கு எவ்வளவு உபயோகிக்க வேண்டும்—கலப்பு உரமிடும் காலம் (அதாவது அடியுரமாகவா அல்லது மேலுரமாகவா)—கலப்பு உரம் உபயோகிப்பதால் நாம் அடையும் நன்மைகள்.

கே. எம். சுந்தரம், விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி, கோவை.

தென்னந்தோப்பு பராமரிப்பு

செப்டம்பர்—அக்டோபர் மாதக் குறிப்பு.

இதுவரை உழவு செய்யாவிடில்; உழவு இப்போது செய்தல் வேண்டும். பசுந்தாள் பயிரை இதுவரை மடக்கி தோப்புகளில் உழாவிட்டால், இப்போது மடக்கி உழுதல் வேண்டும்.

குருத்து வண்டும், குருத்து அழுகல் நோய் இரண்டும் வராதபடி தகுந்த பாதுகாப்பு எடுக்க வேண்டும். குருத்து வண்டை எடுத்து விட்டு பி. எச். சி. 10 சதவீதமும் மணலும் கலந்து மட்டை இடுக்குகளில் தூவ வேண்டும். குருத்து அழுகல் நோய்க்கு துத்தக் கலவையை, பாதிக்கப்பட்ட மரத்திற்கும், சுற்றி உள்ள நல்ல மரங்களுக்கும் தெளித்தல் வேண்டும். குருத்து அழுகல் நோயால் பாதிக்கப்பட்ட பாகங்களை வெட்டி நீக்கிவிட்டு, துத்த பசையை சுத்தம் செய்யப்பட்ட பகுதிகளில் தடவுதல் வேண்டும்.

செப்டம்பர் மாதத்தில் நல்ல இடைவெளி விட்டு நடப்பட்ட தென்னந்தோப்புகளில் சாம்பல் அல்லது தொழு உரம், சூப்பர் பாஸ்பேட் போட்டு நிலக்கடலையை ஊடு பயிராக பயிரிடலாம்.

வீரியச் சோளம் வாழியவே!

எஸ். சுரேஷ்,
சிறுதானிய ஆராய்ச்சி உதவியாளர்,
விவசாயக் கல்லூரி,
கோவை-3.

—:o:—

1.	வளமை	மிகுந்தது	வீரியச்	சோளம்,
	வளப்ப	மிகுந்தது	வளர்த்துப்	பாரும்!
	அழகிய	தானிய	முத்து	வெள்ளை.
	மற்றவை	யேது	மிதற்	கீடில்லை.
2.	பருவம்	குறைந்தநற்	சாய்ந்திடாப்	பயிர்
				தான்
	உயரம்	சிறுத்துநல்	லுறுதி	யுடைத்து
	வீசிடும்	காற்றிலும்	மிடுக்காய்	நின்று,
	மேன்மை	சிறந்திட	விளங்கிநின்	றிடுமே.
3.	வீதைத்து	மும்மாத	முதிர்ச்சி	யடைந்து,
	விரைவினில்	நீண்டு	பருத்துச்	சேர்ந்த;
	கருதினைத்	தாங்கிக்	களிப்புடன்	குலுங்கி,
	அறுத்திடு	வென்னைத்	துடித்திடுவே	னெனச்
4.	சித்திரைப்	பட்டச்	சிறப்புடன்	நின்று,
	ஏனைய	தண்ணீர்,	உரமதை	யுண்டு;
	மற்றவெச்	சோள	தரத்தையும்	வென்று
	மகசூல்	தருவதைக்	களிப்பீர்	கண்டு.
5.	இந்தோ-	அமெரிக்கர்	முயற்சியில்	முடிந்த
	அருமை	வீரியச்	சோளந்	தானே;
	அந்தோ !	நாட்டினில்	வாடும்	மக்களின்
	பசியைப்	போக்கிட	வாழ்ந்திடு	வோமே!
6.	வாழ்கநற்	சோளம் !	வீரியச்	சோளம்!
	வாழிய	வாழியவே ;		
	பாரினில்	மக்கள்	பசிதனைத்	தீர்த்திட
	வாழிய	வாழியவே !		

உங்கள் நெற்பயிருக்குப் பாதுகாப்பு அளியுங்கள்

நாற்றங்காலிலிருந்து அறுவடை வரையில்

'அக்ரோஸான்' ஜிஎன்

விதைகளுக்கான
பாதரசப் பூச்சு
பிளாண்ட் ப்ரொடெக்ஷன் லிமிடெட் தயாரிப்பு

'கம்மெக்ஸேன்'

கிருமி நாசினிகள்
இந்தியாவில்
தயாரிப்போர்:

ஆல்கலி & கெமிகல் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்

விரிவான ஆலோசனைகள் வேண்டுவோர் எழுதுங்கள்:

I. C. I. (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

கல்கத்தா	பம்பாய்	சென்னை	புது டில்லி
த.பெ.நெ. 334	த.பெ.நெ. 310	த.பெ.நெ. 130	த.பெ.நெ. 107

IFC-457A TM

ஆலம்பாடி.

டாக்டர் கிஷ்ணமூர்த்தி, கால்நடை பராமரிப்புத் துறை நெறியாளர்.

சேலம் ஜில்லா காவேரிக்கரையிலுள்ள ஆலம்பாடி என்னும் கிராமத்தின் பெயராலேயே இவ்வினம் 'ஆலம்பாடி' என வழங்கப்படுகின்றது. இதற்கு 'பிட்சல்',

பசு

'காவேரி இனம்' என்ற வேறு பெயர்களும் உண்டு. கோவை, சேலம் மாவட்டங்களில் மேற்குப் பகுதிகளிலும் பெங்களூர் மாவட்டத்திலுள்ள கங்கனகள்ளி வட்டத்திலும் இவ்வினம் பெருவாரியாக காணப்படுகின்றது. இப்பகுதிகளில் ஏராளமாகப் பயிர் செய்யப்படாத காடடர்ந்த நிலங்கள் உள்ளன. மாடுகள் தன்னிச்சையாய் உலவவும் தீவனத்திற்கு வேண்டிய பசும்புல் வேண்டிய அளவு அவைகளுக்குக் கிடைக்கவும் இந்நிலங்கள் பயன்படுகின்றன. மேலும் கோடைக்காலங்களில் மாடுகளுக்கு வேண்டிய குடி தண்ணீரை இங்கு செல்லும் காவேரி ஆறு அளிக்கிறது.

வருடத்தின் பெரும்பகுதி நாட்களில் குறிப்பாக ஜூலை முதல் ஜனவரி வரை இம்மாடுகள் காடுகளிலேயே வாழ்கின்றன. அறுவடை சமயத்தில் இவைகள் கிராமங்களுக்கு கொண்டு வரப்படுகின்றன. வயல்களிலுள்ள பசும்புல் இவைகளுக்கு தீவனமாக கிடைக்கின்றது. இவற்றின் சாணம் வயல்களுக்கு உரமாகப் பயன்படுகின்றது. அறுவடை முடிந்ததும் மறுபடியும் இவைகள் காடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. நோய்வாய்ப்பட்ட பசுக்களையும், இளங்கன்றுகளை உடைய பசுக்களையும் மட்டும் கிராமங்களிலேயே வைத்து பராமரிக்கின்றனர். இவ்வாறு இம்மாடுகள் பெரும்பாலும் மேய்ச்சலையும். உலர்ந்த புட்களையுமே நம்பியிருக்கின்றன.

பொதுச் சிறப்பியல்புகள்—

உழைக்கும் இனத்தைச் சார்ந்தவை. பசுக்கள் மிகக் குறைந்த அளவு பால் கொடுக்கக் கூடியவை. புஞ்சை நிலங்களில் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் எருதுகள் மிகவும் பயன்படுகின்றன. இம்மாடுகள் அதிக பாமனுடையவை. ஆனால் உடலமைப்பு ஒரே சீராக அமையவில்லை இவைகள் அமிருதமகால், ஹல்லிக்கார் ஆகிய மைசூர் இனங்களின் இயல்புகளை ஒத்து இருக்கின்றன.

அங்க அமைப்புகள்—

நீண்ட தலையும், மிக எடுப்பான நெற்றியையும் உடையவை. கொம்புகள் முதலில் பின்புறமும், பிறகு முன்புறமும் வளைந்து அமைந்துள்ளன. அடிப்பாகத்தில் இரண்டு கொம்புகளும் நெருங்கியுள்ளன. மூக்கு கரு நிறமுடையது. காதுகள் நீண்டும் நிமிர்ந்தும் உள்ளன. கண்கள் எடுப்பானவை. கழுத்து குறுகியும் பருத்தும் உள்ளது. திமிள் பெரியது. முதுகு நீளமாகவும், இடுப்பு நோக்கி உயர்ந்தும் உள்ளது. அலேதாடி மெல்லியதாகவும், மார்பு வரை நீண்டும் உள்ளது. உடல், அகன்ற மார்பையும் திரண்ட தோள்களையும் கொண்டது. வால் நீளமாகவும் நுனி மெல்லியதாகவும் உள்ளது. கால்கள் உறுதிபடைத்தவை. இருண்ட சாம்பல் அல்லது சாம்பல் நிறமுடையது. தோல் இருண்ட பழுப்பு நிறம் கொண்டது.

காளைகள்—

காளைக் கன்றுகளையும் சில இடாரிக் கன்றுகளையும் அவைகள் ஒரு வயதை அடையும் முன்னரே விற்று விடுகின்றனர். காளைக்கன்றுகள் மூன்று வயதை அடைந்ததும் தீவனம் கொஞ்சம் அதிகம் கொடுக்கின்றனர். அவைகள் நான்கு வயதில் வேலைக்குத் தயாராகின்றன. ஏராளமான காளைகள் காடுகளிலேயே வளரவிடப் படுகின்றன.

பசு—

குறைந்த அளவு பால் தரக்கூடியவை. உழவுத் தொழிலுக்கும் மற்ற வேலைகளுக்கும் பயன் படுத்தப் படுகின்றன. உடல் உறுதியுடனும், தொப்புள் மடிப்பு உடலோடும் ஒட்டியும் உள்ளது. சில பசுக்கள் சிவப்பு நிறத்தோலையும், சில கருப்பு நிறத் தோலையும் பெற்றுள்ளன. மூக்கு கருப்பு நிறம் உடையதாகவும் இருக்கும்

எருதுகள்—

எளிதாக பழக்கக் கூடியவை. வேகமான ஓட்டங்களுக்குப் பயன்படாது. ஆனால் வண்டி இழுப்பதற்கும், உழவு வேலைகளுக்கும் நன்கு பயன்படுகின்றது. இவ்வினம் நலிவு அடைந்து வருவதை முன்னிட்டு, நல்ல அபிவிருத்தி செய்ய, நல்ல குறிக்கோள்கள் உடைய மாடுகளை பொறுக்கி எடுத்து 1959-ம் ஆண்டிலிருந்து , சின்னச் சேலம் 'ஆடு இனவருத்தி ஆராய்ச்சி நிலையத்தில்' வளர்க்கப்படுகின்றது. நல்ல முறையிலே இந்த இனத்தை அபிவிருத்தி செய்து மக்களின் கால்நடை தரத்தை அந்தந்த பகுதிகளிலே அபிவிருத்தி செய்வதுதான் சர்க்கார் கால்நடைப் பண்ணைகளின் நோக்கம். தென்னாடு முழுவதிலும் ஆலம்பாடி இன எருதுகளை சுமை இழுக்கும் வண்டிகளிலும், சவாரி வண்டிகளிலும் காணலாம்.

காளை



'மாருத்' சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயமுத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்.
(No. C-1, 40404/64—21-4-64.)



குணங்கள் :

சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.

2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்விலில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.

3. ஸ்ப்ரேயர் எஃகு தட்டினால் செய்யப்பட்டவை.

4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.

5. 61 c. m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



மாருத் சார்ஜ் பம்ப்
ரூ. 280

'மாருத்'
நீடித்த அழுத்த சக்தியோடு முதுகில் சுமந்து செல்லக் கூடிய ஸ்ப்ரேயர்.

18 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 290
பித்தளையினால் செய்யப்பட்டது
ரூ. 230



14 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 280
பித்தளையினால் செய்யப்பட்டது
ரூ. 230

தயாரிப்பாளர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
தபால் பெட்டி எண். 539
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், பெங்களூர்-2.

சர்க்கரை வள்ளிக்கிழங்கு சாகுபடி செய்வீர்!

R. பாலகிருஷ்ணன், எம்.எஸ்ஸி. (விவசாயம்), J. சாமுவேல் சுந்தரராஜ், எம்.எஸ்ஸி. (விவசாயம்),
தோட்டக் கலை பிரிவு, விவசாயக் கல்லூரி, கோவை.

தமிழ் நாட்டில் பயிர் செய்யப்படும் கிழங்கு வகைகளில் சர்க்கரை வள்ளிக்கிழங்கு முக்கியமான ஒன்றாகும். சர்க்கரை வள்ளிக்கிழங்கில் மாவுப் பொருள் அதிக அளவில் இருக்கின்றது. எனவே அரிசி பற்றுக்குறையை ஈடுகட்ட சர்க்கரை வள்ளிக்கிழங்கை உணவாகக் கொள்ள லாம். இப்பொழுதும் தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் இக்கிழங்கு எளிய மக்களுக்கு உணவாக அமைந்திருக்கிறது. தமிழ் நாட்டில் சர்க்கரை வள்ளிக்கிழங்கு சுமார் 11,840 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இதன் சாகுபடியை விரிவுபடுத்து வதற்கான வாய்ப்புகள் தமிழ் நாட்டில் அதிகமாக உள்ளன. இக்கிழங்குகளில் உயிர்சத்துக்கள் (Vitamins) "A"யும் "C"யும் மிகுந்து காணப்படுகின்றன. மேலும் சர்க்கரை வள்ளிக்கிழங்கு உண்பதற்கும் ருசி மிகுந்ததாக இருக்கின்றது. ஒரு ஏக்கரில் விளையும் சர்க்கரை வள்ளிக் கிழங்கிலிருந்து கிடைக்கப்பெறும் சக்தி (Energy) ஒரு ஏக்கரில் விளையும் மற்ற உணவு தானியங்களிலிருந்து கிடைக்கப்பெறும் சக்தியைவிட அதிகமாக இருக்கின்றது. சர்க்கரை வள்ளிக்கிழங்கு மனிதர்களுக்கு உணவாவதைத் தவிர, இதன் கொடிகள் கறவை மாடுகளுக்கு சிறந்த உணவாக அமைகின்றது. சர்க்கரை வள்ளிக்கிழங்கில் உருளைக்கிழங்கை விட மாவுப் பொருள், சர்க்கரை, உயிர்சத்துக்கள் ஆகியவை மிகுந்துக் காணப்படுகின்றன. இச் சிறப்புகள் மிகுந்த சர்க்கரை வள்ளிக்கிழங்கின் மற்ற இயல்புகளை ஆராய்வோம்.

சர்க்கரை வள்ளிக்கிழங்கு முதன் முதலில் தென் அமெரிக்காவில் பயிர் செய்யப்பட்டு மற்ற இடங்களுக்கு பரவியதாகக் கருதப்படுகிறது. இப்பொழுது தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, சைனா, பிரேஸில், மலேசியா, கிழக்கிந்திய தீவுகள், மேற்கிந்திய தீவுகள், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் அதிக அளவில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. பாரதத்தில் இக் கிழங்கு தமிழ்நாடு, ஆந்திரா, மைசூர், கேரளம், வங்காளம், பீஹார், மஹாராஷ்டிரம் ஆகிய ராஜ்ஜியங் களில் பயிர் செய்யப்படுகிறது.

சர்க்கரை வள்ளிக்கிழங்கு ஒரு உஷ்ண மண்டலப் பயிராக கருதப்பட்ட போதிலும், மித சீதோஷ்ண மண்டல நாடு களிலும் இது பயிர் செய்யப்படுகிறது.

தட்பவெப்ப நிலை

சர்க்கரை வள்ளிக்கிழங்கின் பயிர் காலம் (duration) இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. குளிர் பிரதேசங்களில் இது நீண்ட நாள் பயிராகவும், உஷ்ண பிரதேசங்களில் குறுகிய காலப் பயிராகவும் பயிர்செய்யப்படுகிறது. மேலும் ஒவ்வொரு வகை சர்க்கரை வள்ளிக்கிழங்கும் குறிப்பிட்ட நாட்களில் அறுவடைக்குத் தயாராகின்றது. இக் கிழங்கு சாகுபடிக்கு நீர்பாசன வசதி இன்றியமையாததாகும். அதிக மழையுள்ள இடங்களில் இக் கிழங்கு மானாவாரி யாகவும் பயிர் செய்யப்படுகின்றது. உதாரணமாக, கேரளம், தென் கன்னடம் ஆகிய இடங்களில் இது மானாவாரியாகப் பயிர் செய்யப்படுகிறது. மண்ணில் அதிக அளவு ஈரமிருந்தால் செடிகளின் வளர்ச்சி அதிக மாக்கப்பட்டு, கிழங்கின் வளர்ச்சிக் குறைந்துவிடும்.

பருவம் :

சர்க்கரை வள்ளிக்கிழங்கு பெரும்பாலும் செப்டம்பர்–அக்டோபர் மாதங்களில் நடப்பட்டு பிப்பரவரி–மார்ச் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. அக்டோபர் மாதம் நடுவதற்கு ஏற்ற பருவமாகும்.

நிலத்தைப் பண்படுத்துதல் :

நிலத்தை நான்கு அல்லது ஐந்து முறை நன்றாக உழுது நல்ல புழுதியாக்கிக்கொள்ளவேண்டும். பின்பு நிலத்தில் 2½ அடி இடைவெளியுள்ள பார்களையமைக்கவேண்டும். இப்பார்களுக்குப் பக்கத்தில் 9 அங்குல இடைவெளி விட்டு கொடிகளை நடவேண்டும்.

விதைப் பொருளும் நடவு முறையும் :

சர்க்கரை வள்ளிக்கிழங்கு கொடிகளின் மூலம் இனப் பெருக்கம் செய்யப்படுகின்றது. 9 அங்குல அளவுக்கு வெட்டப்பட்ட கொடிகள் நடுவதற்கு பயன்படுகின்றன. கிழங்குகளையும் துண்டித்து நடலாம். ஆனால் கொடிகள் தான் நடுவதற்கு சுலபமானவையாகும். கொடிகளை நாற்றங்களிலிருந்து வெட்டியெடுத்து, 9 அங்குல அளவாக வெட்டிக்கொள்ளவேண்டும். இவற்றை நீர் பாய்ச்சப்பட்ட பார்களின் ஒரு பக்கத்தில் கொடிக்கு கொடி 9 அங்குல இடைவெளி விட்டு நடவேண்டும். நடும்பொழுது கொடியின் நடு பாகத்தை பூமிக்கடியிலும், கொடியின் இரு நுனிகளை பூமிக்கு மேலும் இருக்குமாறு நட வேண்டும்.

உரமிடுதல் :

ஒரு ஏக்கருக்கு 10 டன் தொழு உரமோ அல்லது கம்போஸ்ட் உரமோ இட்டு நன்றாக உழுது விடவேண்டும். சாதாரணமாக இரசாயன உரங்களை சர்க்கரை வள்ளிக் கிழங்குக்கு பயன்படுத்துவதில்லை. ஆனால் ஏக்கருக்கு 2·5—8—10 என்ற விகிதத்திலுள்ள கலப்பு உரத்தை 1,000 முதல் 1,500 ராத்தல் வரை இடுவதனால் நல்ல மகசூல் காணலாம் எனக் கூறப்படுகிறது. மணிச்சத்து கிழங்கின் வளர்ச்சிக்கும், பொடாஷ் சத்து கிழங்கில் மாவுப் பொருள் அதிகமாவதற்கும் பயன்படுகின்றன.

நீர் பாய்ச்சுதல் :

கொடிகளை நட்டவுடன் 3 முதல் 5 நாட்களுக்கு ஒரு முறையும், பின்பு 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறையும் நீர்பாய்ச்சி வரவேண்டும்.

பின் செய் நேர்த்தி

நட்ட பின்பு களைகளை அகற்றி விட வேண்டும். நட்ட $2\frac{1}{2}$ மாதத்திற்குப் பின் மண் வெட்டியால் வெட்டி மண் அணைக்கும் முறையும் பழக்கத்திலிருக்கின்றது.

அறுவடை

சர்க்கரை வள்ளிக் கிழங்கு நட்ட $4\frac{1}{2}$ முதல் 5 மாதங்களில் அறுவடைக்குத் தயாராகின்றது. அறுவடை செய்யும் காலம் கிழங்கு வகைக்கேற்றவாறு மாறுபடும். சாதாரணமாக கிழங்கு முற்றும் பொழுது இலைகள் பழுத்து விடுகின்றன. முற்றிய கிழங்கை வெட்டிப்பார்த்தால் வெட்டப்பட்ட மேல் பாகத்தில் பால் வெண்மையாக காய்ந்துவிடும். நன்குக முற்றுத கிழங்குகளை வெட்டினுல் பால் கரும்பச்சை நிறமாக காய்ந்து விடும். கிழங்குகளை தோண்டும் முன் கொடிகளை யகற்றிவிட வேண்டும். பின்பு மண்வெட்டிகளால் கிழங்குகளை தோண்டி யெடுக்க வேண்டும்.

மகசூல்

மானுவாரியான பயிரில் ஏக்கருக்கு 5,000—7,000 ராத்தல் வரை கிழங்கும், 6,000—10,000 ராத்தல் வரை கொடியும் அறுவடை செய்யலாம்.

இறவைப் பயிரில் திருந்திய வகைகளைக் கொண்டு ஏக்கருக்கு 20,000 முதல் 30,000 ராத்தல் வரை கிழங்கு கிடைக்கின்றது.

விவசாய இலாகாவில் கிழங்கு ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் ஐந்து வகைக் கிழங்குகள் சிறந்தவையென தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அவை பின் வருமாறு :—

வி–2.—இது ஒரு சீனரகம். தோல் வெள்ளை நிறமுடையது. நல்ல வேகும் தன்மையும், ருசியும் உள்ளது. ஏக்கருக்கு 12 டன் கிழங்கு வரை மகசூல் அளிக்கும். நட்ட நான்கு மாதங்களுக்குப்பின் அறுவடைக்கு வருகிறது.

வி–6.—இது சிவப்பு நிறத் தோலுடைய மற்ெருரு சீன ரகம். சிறந்த வேகும் தன்மையும், ருசியுமுடையது. ஏக்கருக்கு 12 டன் முதல 15 டன் வரை மகசூல் கொடுக்கும். நட்டபின் 140 நாட்களில் அறுவடைக்கு வருகிறது.

வி–8.—இது வெள்ளை நிறத் தோலைக் கொண்ட அமெரிக்க ரகம். சிறந்த வேகும் தன்மையும் ருசியுமுடையது. ஏக்கருக்கு 12 முதல் 15 டன் வரை மகசூல் கொடுக்கும். நட்ட 135 நாட்களில் அறுவடை செய்யலாம்.

வி–12.—இது வெள்ளை நிற தோலுடைய மற்ெருரு சீன ரகம். நல்ல ருசியும், வேகும் தன்மையுமுடையது நட்ட 125 நாட்களில் அறுவடை செய்யலாம்.

வி–219.—சிவப்புத் தோலைக் கொண்ட அமெரிக்க ரகம். நல்ல வேகும் தன்மையும், ருசியுமுடையது. ஏக்கருக்கு 12 டன் மகசூல் கொடுக்கும். நட்டப் பின் $4\frac{1}{2}$ மாதங்களில் அறுவடைக்கு வருகிறது,

சர்க்கரை வள்ளிக்கிழங்குகளைத் தாக்கும் பூச்சிகளில் வண்டுகள் மிக முக்கியமானவையாகும். இவை கிழங்குகளை நிலத்திலும் சேமித்து வைக்கும்பொழுதும் வெகுவாக பாதிக்கின்றன. இப்பூச்சிகளை ஒழிக்க கொடிகளுக்கு ''டையல் டிரின்'' என்ற மருந்தைத் தெளிக்க வேண்டும். மேலும் கிழங்குகளை மணலில் சேகரித்து வைக்க வேண்டும்.

வரவு செலவு (ஏக்கருககு)

	ரூ.	பை.
நிலத்தை உழுது தயார் செய்ய (ஐந்து முறை உழுவதற்கு)	50	00
எருவிடும் செலவு ..	100	00
பார் ஓட்ட (சால் அமைக்க) செலவு ..	10	00
நடுவதற்கு செலவு ..	20	00
நீர் பாய்ச்சும் செலவு (15 தடவை) ..	75	00
களை எடுக்க (20 பெண்கள்) ..	20	00
கிழங்கு தோண்டும் செலவு (15 ஆண் 7 பெண்)	30	00
இதர செலவுகள் ..	30	00
	335	00

வரவு

20,000 ராத்தல் கிழங்கு—ராத்தல் 6 பை. வீதம்.	1,200	00
கொடிகள் விற்பனை	50	00
	1,250	00
வரவு ..	12,50	00
செலவு ..	335	00
நிகர லாபம்..	915	00

சர்க்கரை வள்ளிக்கிழங்கின் உபயோகங்கள்.

சர்க்கரை வள்ளிக்கிழங்கை வேக வைத்து உண்ணலாம். மேலும் இதன் மாவை கோதுமை மாவுடன் கலந்து சப்பாத்தி, பிஸ்கட்டுகள், ரொட்டிகள் முதலியவை செய்யலாம், இதன் மாவு தொழில் துறையில் பயன் படும் ஸ்டார்ச் (Industrial Starch) செய்யப் பயன் படுகிறது,

உணவுப் பற்ருக்குறையை நீக்க, அதிக பயனும் லாபமும் தரும், திருந்திய சர்க்கரைவள்ளிக்கிழங்கு வகைகளைப் பயிர் செய்து நம் விவசாயிகள் பலனடைவார்களென்பது திண்ணம்.

டாடா பைஸன் மற்றும் ராலி

ஒரு பிரச்னையைத் தீர்க்கிருர்கள்!

நீண்ட மௌனத்தை முதலில் கலேத்தார் டாடா.

''நல்ல வளர்ச்சிக்கான அறிகுறிகள் இருக்கின்றன'' என்ருர் அவர்.
''சிறந்த வடிவழகு!'' என்று எழிலில் சொக்கினர் பைஸன்.

''கட்டான தேகவாகு'' என்ருர் ராலி தம் போக்கில்.
''உண்மை!'' என்று அதை ஆமோதித்தார் டாடா.

''இந்த வளர்ச்சியில் நமக்கும் பங்கு உண்டு. ராலீஸ்
'மரம் மார்க்' உரங்கள் மேலும் சிறந்த காப்பிப் பயிர் வளர உதவுகிறது.
டாடா பைஸன் பூச்சி மருந்துகள் அமோகமான
விளேச்சல் தர அதைப் பாதுகாக்கிறது.''

காப்பிக்கொட்டை நாணிக்கோணிப் பேசிற்று:
''காப்பி ருசியாயிருப்பதற்கும் அது ஒரு காரணம்.''

TATA FISON RALLIS
TREE BRAND
FERTILIZERS AND PESTICIDES

டாடா பைஸன் ராலீஸ்
பயிர் அபிவிருத்திக்குப் பணி புரிகிறது!

SHBI-RF-87 TAM

1965-ம் ஆண்டு ஜூன் மாதக் காலநிலை அறிக்கை

[சி. பாலசுப்பிரமணியன், பி.ஏ, பி.எஸ்ஸி.(ஏஜி), சீ. ரங்கநாதன், பி.எஸ்ஸி.(ஏஜி.) விவசாயக் காலநிலை ஆய்வுப்பிரிவு, கோயமுத்தூர்–3.]

இம்மாதம் முதல் இருதினங்களில் தமிழகத்தின் சிற்சில இடங்களில் மழை பெய்தது. அடுத்த இரு தினங்களில் பொதுவாக வரட்சி நிலவியது. தொடர்ந்து 5-ம் தேதி சிற்சில இடங்களிலும் 6, 7-ல் ஆங்காங்கும் மழை பெய்தது. பின்னர் 8, 9 தேதிகளில் சிற்சில இடங்களில் மட்டும் மழை பெய்தது. 10, 11 தேதிகளில் வானிலை வரண்டிருந்தது. 12 முதல் 21-ந் தேதிவரை பத்து நாட்களில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. 22 முதல் 28-ந் தேதிவரை ஏழு நாட்களில் பொதுவாக வரட்சி நிலவியது. இம்மாதத்தின் கடைசி இரண்டு நாட்களில் தமிழகத்தின் சிற்சில இடங்களில் மழை பெய்தது.

பகல் வெப்ப நிலை இம்மாதத்தின் நான்கு தினங்களில் சராசரிக்கு அதிகமாகவும் இரு தினங்களில் சராசரிக்கு குறைவாகவும் இருந்தது. எஞ்சிய நாட்களில் சராசரிக்கு சரியாகவேயிருந்தது.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்.—இம்மாதம் செங்கற்பட்டு மாவட்டத்தில் சுமாரான மழை பெய்தது. திரூர்குப்பம் பகுதியில் CO.29, TKM. 6, மற்றும் SLO. 16, நெற்பயிர்களில் இலைப்புள்ளி நோயும், CO.29, TMK. 6, நெற்பயிர்களில் குருத்துப் பூச்சிகளும் சுமாராக காணப்பட்டன. தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களிலும் சுமாராக மழையிருந்தது. திண்டிவனம் பகுதியில் நிலங்கள் பண்படுத்தவும் நிலக்கடலை அறுவடைக்கும் இம்மழை உதவியது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை, நாகப்பட்டினம் பகுதிகளில் சற்று அதிக மழை பெய்திருக்கிறது, ஆடுதுறையில் பெய்த மழை பசுந்தாளுரச் செடிகளுக்கும் நிலங்கள் தயார்படுத்தவும் உதவியது. பட்டுக்கோட்டையில் போதிய மழையின்றி ADT. 27 நெற்பயிர், நிலக்கடலை, மற்றும் காய்கறிப்பயிர்கள் வாட்டமுற்றன. இங்கு நிலக்கடலையில் "டிக்கா" இலைப்புள்ளி நோய் காணப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெய்த மழை நிலங்கள் பண்படுத்தவும் பொதுவாக P 216F. பருத்தி மற்றும் சிறுதானியப் பயிர்களுக்கும் உதவியது. கரூரில் பெய்த மழை நிலக்கடலையில் சுருள் பூச்சிகளை ஒழிக்கவும், நிலங்களை உழுது பண்படுத்தவும் உதவியது. இங்கு நிலவிய வரண்ட சீதோஷ்ணம் நவரை நெற்கதிர்களையும், கோடைச் சோளத்தையும் பதறடிக்க உதவியது.

மதுரை மாவட்டத்தில் மழை மிகக் குறைவு. பெரியகுளம் பகுதியில் பெய்த மழை சோளம், உருளைக்கிழங்கு, மற்றும் காய்கறிப் பயிர்களுக்கு உதவிற்று. இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலும் மழை போதிய அளவு இல்லை. சாத்தூர் பகுதியில் பெய்த மழையால் நிலக்கடலை, எள் பயிர் முதலியன பயனுற்றன சிவகங்கையில் நிலங்கள் உழுது பண்படுத்தப்பட்டன. திருநெல்வேலியில் பெய்த மழை பொதுவாகஎல்லா பயிர்களுக்கும் உகந்திருந்தது. கோவில்பட்டியில் பருத்தியில் சிறிதளவு காய்ப்புழுக்களும், நாவாய்ப் பூச்சிகளும், அசுவினியும் சோளப்பயிரில் பெருமளவில் கதிர் வண்டுகளும் வெங்காயத்தில் திரிப்ஸும் வெகுவாக காணப்பட்டன. சங்கரன்கோவிலில் பெய்த மழை சோளம் மிளகாய் பயிர்களுக்கும் கம்பு மற்றும் பருத்தி நடவுக்கும் உகந்திருந்தது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சற்று கனத்த மழை பெய்தது. இங்கு நிலவிய குளிர்ந்த சீதோஷ்ணம் மரங்கள் தளிர்க்க உதவிற்று. நாகர்கோவிலில் நெல், மரவள்ளி, நிலக்கடலை, காய்கறிகள், வாழை மற்றும் பழ மரங்களும், தென்னந்தோப்புகளும் இம்மழையால் பயனுற்றன. சேலம் மாவட்டத்தில் பெய்த மழை நிலங்கள் உழுது பண்படுத்த உதவியது. நாமக்கல் பகுதியில் நெற்பயிரில் கொள்ளை நோயும், நாவாய்ப் பூச்சிகளும், திரிப்ஸும், கதிர் வண்டுகளும், பருத்தியைக் காய்ப்புழுக்களும் கருங்கிளை நோயும் மிதமாகத் தாக்கின. நிலக்கடலையில் அசுவினியும், திரிப்ஸும் சுருள்பூச்சிகளும் காணப்பட்டன. கோயமுத்தூர் மாவட்டத்தில் மழையில்லை. இங்கு நெற்பயிரில் குருத்துப் பூச்சிகளும், ராகியில் கொள்ளை நோயும், நாவாய் பூச்சிகளும் நிலக்கடலையில் அசுவினியும் காணப்பட்டன: ஈரோடு பகுதியில் சோளம் அறுவடைக்கு வந்தது. குறுவை நெல் நாற்றங்கால்கள் போடப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் பெய்த மழை பொதுவாக எல்லாப் பயிர்களுக்கும் ஏற்றதாயிருந்தது.

இம் மாதத்திய குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழையளவுகளும் பின் வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவுகள்

(அங்குலத்தில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	பெய்த மழையின் அளவு.
1	7–6–1965	சேலம்	1·42
2	14–6–1965	கடலூர்	1·54
3	18–6–1965	கன்னியாகுமரி	1·55

பிராந்திய மழையளவுகள்

(அங்குலத்தில்)

பிராந்தியம்.	ஜூன் மாத மழை யளவு.	சராசரியி லிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
1 வட பிராந்தியம்	1·1	—1·2	மிகக் குறைவு
2 கிழக்கரை பிராந்தியம்	1·9	—1·9	ஷை
3 மத்திய பிராந்தியம்	0·9	—1·7	ஷை
4 தென் பிராந்தியம்	1·6	—0·4	குறைவு
5 மலைப் பிராந்தியம்	1·6	—3·3	மிகக் குறைவு

1965-ம் ஆண்டு ஜூன் மாதத்திய காலநிலை அறிக்கை மழையளவு (அங்குலத்தில்).

இடத்தின் பெயர்	இம்மாத மழை யளவு.	சராசரியி லிருந்து மாறுபாடு.	ஜனவரி 1-ம் தேதி முதல் மழை யளவு
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்).	2·1	+0·2	4·4
திரூர் குப்பம்*	0·7	—2·2	1·3
வேலூர்	1.1	—1·7	4·9
குடியாத்தம்*	0·5	—1·1	2·7
கீழ்க்கரை பிராந்தியம்.			
பாலூர்*	2·2	+†	5·9
திண்டிவனம்*	2·5	+0·4	5·6
கடலூர்	2·4	—1·1	4·8
நாகப்பட்டினம்	1.5	+0·2	7·5
ஆடுதுறை*	2·1	+0·6	6·7
பட்டுக்கோட்டை * ..	0·7	—1·0	6·0
மத்திய பிராந்தியம்.			
சேலம்	2·0	—1·1	5·9
சேலம்*	1·7	—0·9	7·4
கோயமுத்தூர்* ..	0·1	—1·8	7·4
கோயமுத்தூர் ..	இல்லை	—1·5	4·6
ஆலியார் நகர்*	0.6	—3·9	5·4
திருச்சிராப்பள்ளி ..	0·9	—0·8	4·2
தென் பிராந்தியம்.			
மதுரை	இல்லை	—1·6	2·9
பாம்பன்	இல்லை	—0·2	5·3
கோவில்பட்டி*	இல்லை	—1·1	7·1
பாளையங்கோட்டை ..	‡	—0·4	4·0
அம்பாசமுத்திரம்* ..	0·4	—0·5	6·5
நாகர்கோயில்*	4·9	—0·8	14·4
கன்னியாகுமரி* ..	5·7	+2·1	8·2
மலைப் பிராந்தியம்.			
கோடைக்கானல் ..	1·9	—2·3	17·2
கூனூர் *	0·2	—2·6	15·6
உதகமண்டலம்* ..	1·7	—3·8	8·7
நஞ்ச நாடு*	2·5	—4·5	8·5

* விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.
† 0·02″ ‡ 0·04″

விவசாயிகளுக்கு......!

விவசாய சம்பந்தமான கேள்விகளுக்கு 'மேழிச் செல்வம்' பத்திரிகை மூலமாக பதில் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கம் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி தங்கள் முகவரியுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு கோரப்படுகிறார்கள்.

கேள்விகள் அனுப்பப்படவேண்டிய முகவரி—

மேழிச் செல்வம் கேள்வியும் பதிலும்
விஸ்தரிப்பு நிபுணர்,
விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக்கூடம்,
கோயமுத்தூர்-3.

குறிப்பு :—கேள்விக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம் :
ராஜா பண்ணைத் தோட்டம்
இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி
வெண்டை
மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி
கொத்தவரை
ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற
கத்திரி
புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி
வெங்காயம்
இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய்,
முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி
முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள்,
தென்னங் கன்றுகள், கனி நாசினிகள்
கிடைக்குமிடம் :—
ராஜா பண்ணைத் தோட்டம்
3, வைத்தியராமய்யர் தெரு, தி. நகர்
(இந்தி பிரசார சபா அருகில்), சென்னை-17.
தந்தி : RAJSEED போன் : 42262

திருநெல்வேலி மாவட்ட " தீவிர விவசாயப் பகுதித் திட்டம் " துவக்க விழா

விழாவை ஆரம்பித்து வைத்த தொழில் அமைச்சர் திரு. R. வெங்கட்ராமன் அவர்களுடன், திரு. S. பிரான்சிஸ், விவசாயத் துறை கூட்டு நெறியாளர் (தீவிர விவசாய பகுதித் திட்டம்) திரு. ராஜேந்திரன், மாவட்ட கலெக்டர் முதலியோர்.

தீவிர விவசாய பகுதித் திட்டத்தைப் பற்றி திரு. S. பிரான்சிஸ் விளக்குவதை தொழில் அமைச்சர் திரு. R. வெங்கட்ராமன், மாவட்ட கலெக்டர் திரு. ராஜேந்திரன் முதலியோர் ஊன்றிக் கவனிக்கின்றனர்.

நெல் பயிர் விளைச்சல் போட்டியில் முதற் பரிசுபெற்ற கீழநத்தம் கோபால சீனிவாசன் அவர்களுக்கு தொழில் அமைச்சர் திரு. R. வெங்கட்ராமன் அவர்கள் பரிசுக் கோப்பை வழங்கும் காட்சி.

[1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் தேதி திருநெல்வேலியில் நடந்த விழாக் காட்சிகள்]

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1965

செங்கல்பட்டு மாவட்ட "தீவிர விவசாயப் பகுதித் திட்டம்" துவக்க விழா

பொருட்காட்சியை தகவல்செய்தி அமைச்சர் திரு. கோ. பூவராகவன் துவக்கி வைக்கிறார். உடனிருப்பவர்கள் திரு. V. K. ராமசாமி முதலியார், M.L.C., அமெரிக்கக் கான்சல் ஜெனரல் திரு. பிராங்க்ளின், மாவட்ட கலெக்டர் திரு. பிரபாகர், மாவட்ட விவசாய அதிகாரி திரு. நாராயணன், அந்நாள் வானொலி விவசாய அலுவலர் திரு. A. ஜான்நைட் முதலியோர்.

முதல் அமைச்சர் திரு. M. பக்தவத்சலம், விவசாய அமைச்சர் திரு. P. கக்கன், விவசாயத் துறை நெறியாளர் திரு. கே. வி. ராமநாதன் முதலியோருக்கு நெல் நிபுணர் திரு. வி. சீனிவாசன் பொறுக்கு நெல் ரகங்கள் பற்றி விளக்கும் காட்சி.

மாவட்ட கலெக்டர் திரு. பிரபாகர், செங்கல்பட்டு மாவட்டத்தில் திட்ட வேலைகள்பற்றி விளக்குவதை விவசாயத்துறை நெறியாளர் திரு. கே. வி. ராமநாதன், திரு. V. K. ராமசாமி முதலியார், M.L.C., முதல் அமைச்சர் திரு. M. பக்தவத்சலம், விவசாய அமைச்சர் திரு. P. கக்கன் முதலியோர் ஊன்றிக் கவனிக்கின்றனர்.

[1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி காஞ்சீபுரத்தில் நடைபெற்ற துவக்க விழா காட்சிகள்]

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.